

# தூய ஆவியில் பயணம்

2011 ஆடி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய ஆவியில் பயணம்

ஆடி மாதம் 2011

**தூய ஆவியானவரே,**
**நான் உம்மை வணங்கி**
**நமஸ்கரிக்கிறேன்.**
**நான் செய்ய வேண்டியது**
**என்னவென்று எனக்கு**
**ஆணையிட்டருளும்!**

ISSN 1391 - 5975

வெளியிடுபவர்
சிறி ஒஸ்கா அபயரத்ன அடிகளார்
கிது தன புபுதுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபத்திற்கு கைகொடுத்தல்

2011 ஆடி

**"இதோ! உலக முடிவு வரை நான் எந்நாளும் உங்களுடன் இருக்கிறேன்"**

ஆண்டவர் இன்றும் நேற்றும் என்றும் எவ்விடத்திலும் எம்மோடு இருக்கின்றார்.

இயேசு நாதர் மகிழ்ச்சியிலும், கவலையிலும் வேதனையிலும், சோதனையிலும், நாளும் - மணித்தியாலங்கள் கடந்து செல்லுகையிலும் எம்முடனாம். கேள்வியாவது, இந்த மாபெரும் வெளிப்பாட்டினைப் பற்றி விழிப்புறுதல் இருக்கின்றதா? இல்லையா?

நாம் இந்து, பௌத்த பக்தர்களாயினும், அவர் எம் அனைவரோடும் வாழ்கின்றார். இறைவனைப் பற்றித் தர்க்கிப்பவர்கள் இருக்கலாம். எனினும் சத்தியம் நிலைத்திருக்கின்றது. அதுவே ஆண்டவர் எவ்வேளையிலும், எவ்விடத்திலும் எம்முடன் கூட இருக்கின்றார் என்பதாகும்.

அருட் திரு ஒஸ்கா அபயரத்ன அடிகளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2011 | ஆடி 01 வெள்ளி | இயேசுவின் திரு இருதய பெருவிழா | |
|---|---|---|---|
| இ.சட்டம் | தி.பாடல் | 1யோவான் | பு. மத்தேயு |
| 7:6-11 | 103:1-46-8,10 | 4:7-16 | 11:25-30 |

**பரி. நற்செய்தியிலிருந்து**

*அவ்வேளையில் இயேசு கூறியதாவது, தந்தையே விண்ணுக்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் இவற்றை மறைத்து சிறுவருக்கு வெளிப்படுத்தியதால் உம்மைப் புகழுகின்றேன். ஆம் தந்தாய் இதுவே உமது திருவுளம். என் தந்தை எனக்கு எல்லாவற்றையும் கையளித்துள்ளார். மகன் யாரென்று தந்தையன்றி வேறெவனும் அறியான்... சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன்.. நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன். உங்கள் ஆன்மாவிற்கு இளைப்பாற்றி கிடைக்கும், ஆம் என் நுகம் இனிது. என் சுமை எளிது (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியில் விழிப்புறுதல்**

தூய ஆவியே! துணையாக இருப்பவரே, இவ்வார்த்தையின் வழி இயேசு கிறிஸ்துவின் உள்ளாந்தரத்தை சற்றேனும் சுவைத்திட வல்லமை தாரும்.

என் தந்தை எல்லாவற்றையும் எனக்குக் கையளித்துள்ளார். மகன் யாரென்று தந்தையன்றி வேறெவரும் அறியார். இவ்வார்த்தைகளைத் தியானிக்கும் போது தந்தை மகன் உறவு எப்படிப்பட்ட தென்று தெளிவாக விளங்கக் கூடியதாக உள்ளது. நான் இவ்வுலகிற்கு வந்ததன் நோக்கம் என்னை அனுப்பிய தந்தைக்கு மட்டுமே தெரியும் என்கிறார் போலும். ஆகவே தான் இறையாட்சியைப் பற்றிய நற்செய்தியை ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் மறைத்து சிறுவராகிய சாதாரன மக்களுக்கு வெளிப்படுத்தியதற்காக விண்ணிற்கும், மண்ணிற்கும் முழு வரலாற்றுப் படைப்புக்களுக்கும் உரிமையாளராம் அப்பா தந்தையைப் புகழ்ந்து மகிமைப் படுத்துகின்றார்.

மேலும் சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன் என்று அன்போடு எம்மை அழைப்பது மட்டுமல்லாமல், உங்கள் மேல் என் நுகத்தை ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள் என்கிறார். அதாவது உங்கள் பாரச்சுமைகளை என் தோளில் சுமத்திவிட்டு மக்களே நீங்கள் விடுதலை அடையுங்கள். நீங்கள் அமைதி பெறுங்கள் என்று எமக்கும் கூறுகின்றார். நான் சாந்தமும் மனத்தாழ்ச்சியும் உள்ளவன் உங்கள் ஆன்மாவிற்கு இறைப்பாற்றி கிடைக்கும். எனவே என் நுகம் இனிது. என் சுமை எளிது என்கிறார்.

**எம் பேரில்**

அப்பா தந்தையானவர் எமக்கும் இறையாட்சியைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்கின்றார். ஆனாலும் நான் ஞானியைப் போல் விவேகிகளைப் போல சுவைகளை அனுபவிக்க முடியாத நிலையில் வாழ்கிறேனா? நான் அறிவாழி எனக்கூறிக்கொள்ளும் அறிவிலியா? என் சுமைகளோடு சேர்ந்து அமிழ்ந்து போகும் நிலையில் நாம் இருந்தால் கிறிஸ்து இயேசுவின் இன்றைய வார்த்தையின் மூலம் அவரது நுகத்தை ஏற்றுக்கொண்டு வாழ முன்வருவோம் அதற்கான வரத்தை வேண்டிச் செபிப்போம்

**செபம்**

என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! என் முழு உளமே அவரது திருப்பெயரை ஏற்றிடு. அவர் என் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார். உன் நோய்களையெல்லாம் குணமாக்குகன்றார். ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர். நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவர் (தியானித்து உரிமையாக்கிக் கொள்வோம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன்**
**நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்**

| | | |
|---|---|---|
| **2011 ஆடி 02 சனி** | | தேவ தாயின் மாசற்ற திரு இருதய பெருவிழா |
| **எசாயா** | **சாமுவேல்** | **பு. லூக்காஸ்** |
| **61:9-11** | **2:1,4-8** | **2:41-52** |

**முதலாம் வெளிப்பாட்டிலிருந்து**

*.....ஆண்டவரில் நான் பெருமகிழ்ச்சி அடைவேன். என் கடவுளில் என் உள்ளம் பூரிப்படையும்...*

**நற்செய்தி வெளிப்பாட்டிலிருந்து**

*....ஆண்டு தோறும் இயேசுவின் பெற்றோர் பாஸ்கா விழாவைக் கொண்டாட எருசலேமுக்குப் போவார்கள்.... ஒரு நாள் பயணம் முடிந்த பின் உறவினர்களிடை-யேயும், அறிமுகமானவர்களிடையேயும் அவரைத் தேடினர். ....அவர் அவர்களிடம் நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா? என்றார்....அவருடைய தாய் இந்நிகழ்ச்சிகளை எல்லாம் தம் உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியின் விழிப்புறுதல்**

ஒளியானவராம் தூயனே, மறைபொருளின் இரகசியத்தை புரிந்து வாழ ஒளியைத் தாரும்.

தேவதாயின் மாசற்ற திரு இருதய பெருவிழாவை இன்று கொண்டாடும் இறை மக்களாகிய நாம், தாயின் உள விருப்புக்களுக்கு உளந்திறப்போம். இறைவனில் என் இதயம் பெருமகிழ்ச்சி கொள்ளும் எவ்விதமான கறைபடாத தேவதாயின் மாசற்ற இதயம் வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்கு முகங்கொடுத்த விதத்தினை நோக்குகையில் எங்கிருந்து இந்த வல்லமை பிறந்தது என எண்ணத் தோன்றுகின்றது. கணத்திற்கு கணம் அனைத்தையும் தம் உள்ளத்தில் பதித்தவராய் வாழ்ந்த தாயவர் இறை திரு திட்டத்திற்கு அடிபணிந்தார் என்பது உண்மையாகும்.

(இ.ச 16:16-17)ல் உன் ஆண் மக்கள் அனைவரும்... ஆண்டவர் திருமுன் வெறுங்கையராய் வர வேண்டாம். உன் கடவுளாகிய ஆண்டவர் அவர்களுக்கு ஆசி வழங்கியுள்ளதற்கேற்ப ஒவ்வொருவனும் தன்னால் ஆனதைக் கொண்டு வருவானாக!

இவ்வார்த்தை திருச்சட்டத்தை வெளிப்படுத்துகின்றது. ஆம் திருவிழாவிற்கு சென்ற மகன் இறைதந்தை தனக்கு வழங்கியிருந்த ஆசீர்வாதமாம் ஞானத்தை, சட்ட வல்லுனர்களோடும் அறிஞர்களோடும் பகிர்ந்து அனைவரையும் வியக்கச் செய்து, தந்தையின் அலுவலை நிறைவேற்றிய விதத்தினைக் கண்டு மாசற்ற தாயார் கடவுளில் பூரிப்படைந் திருப்பாரல்லவா?

**எம்பேரில்**

எமக்கு இறைவன் அளித்த ஆசீர்வாதமாகிய கொடைகள் என்ன? அதனை இறை அரசைக் கட்டி எழுப்ப காணிக்கையாக அளிக்கின்றோமா? எம்மை நோக்குவோம். அதற்கான வல்லமையை பெற்றுத் தரும்படி மாசற்ற அன்பு நிறை தாயாரிடம் இரஞ்சி மன்றாடுவோம்.

**செபம்**

மாசற்ற திரு இருதயத் தாயே! ஒவ்வொருவரும் ஆண்டவர் வழங்கிய ஆசீருக்கேற்ப தன்னாலான பணியை, மகிழ்ச்சியோடு புரிந்து இறைவனை மகிமைப்படுத்தவும் அவருடைய பிள்ளைகளாக என்றும் வாழவும் தேவையான ஆவியானவரின் ஆற்றலை எங்களுக்கு பெற்றுத் தந்தருளும் ஆமென்! அல்லேலூயா!!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 2011 ஆடி 03 ஞாயிறு | | பொ.கா 14 வது ஞாயிறு | |
| செக்கரியா | தி.பாடல் | உரோமர் | பு. மத்தேயு |
| 9:9-10 | 145:1-2,8-11,13-14 | 8:9,11-13 | 11:25-30 |

**அறிமுகம்**

எம் நாட்டின் அரசியல் கலாச்சாரம் நாளுக்கு நாள் மக்களுக்கு வெறுப்பினை ஏற்படுத்துகின்றது. தேர்தல் காலங்களில் பொய்யான வாக்குறுதிகளினை அளித்து மக்களை ஏமாற்றி, பலத்திற்கு ஆவல் கொண்ட கபடமிகு மனிதரை தலைவர்களாக்கிய பின் தாம் எடுத்துக் கொண்ட தீர்மானத்தினை முன்கொண்டு மனம் வருந்துபவர்கள் பலர். நான், எனது எனக்கு எனும் சுயநலதிற்கு உள்ளாகி வாழும் மக்களை சரியான பாதையில் வழிநடத்துவதற்கான தேவை பல மத தலைவர்களுக்குக் கூட இல்லை. ஏனென்றால் அரசியல் கட்சியாளர்கள் அவர்களையும் தம்கை வசம் கொண்டிருப்பதனலாகும்.

அரசர்க்கெல்லாம் அரசரான இயேசு கிறிஸ்து ஆண்டவரின் அரசாளுமையில் முழுமையான மாற்றம் வெளிப்படுகின்றது. அவர் தலைவர்க்கெல்லாம் தலைவராகவும் பணியாளர்க்கெல்லாம் பணியாளராகவும் இருந்தார். தாம் அரசரென ஆணவம் கொண்டு உன்னத நிலையை கைப்பற்றிட எத்தனிக்கும் பலவான்களை வெட்கமுறச் செய்யும் அபிமானமிகு ஆட்சியாளராம் அவரைத் தவிர வேறு தலைவர்கள் எமக்கில்லை. இயேசு கிறிஸ்துவே எம் ஒரே ஆண்டவர் (1கொரி 12:3)

**உட்புகு பாடல்**

இறைவனே உமது மாளிகையில் உம் கருணையை நாம் பெற்றுக் கொண்டோம். உமது நாமம் பூமியின் எல்லைவரை பரவிச் செல்கின்றது. உமக்குரிய புகழ்ச்சி எங்கும் ஒலிக்கின்றது. நீர் நீதியோடு அரசாள்கின்றீர்.

**முதலாம் வெளிப்பாடு**

மகளே சீயோன் மகிழ்ந்து களிகூரு. மகளே எருசலேம் ஆர்ப்பரி, இதோ உன் அரசர் உன்னிடம் வருகிறார். அவர் நீதியுள்ளவர். வெற்றி வேந்தர். எளிமையுள்ளவர். கழுதையின் மேல், கழுதைக் குட்டியாகிய மறியின் மேல் ஏறி வருகின்றார்... வேற்றினத்தாருக்கு அமைதியை அறிவிப்பார். அவரது ஆட்சி ஒரு கடல் முதல் மறு கடல் வரைபேராறு முதல் நிலவுகின்ற கடை எல்லைகள் வரை செல்லும்....

**ஒளியின் விழிப்புறுதல்**

கிறிஸ்துவுக்கு முன் 518ன் பின் எழுதப்பட்ட பகுதி என்று கருதப்படும் செக்கரியா 9-14 அதிகாரங்கள் வருகை வரவிருக்கின்ற மீட்பாளரைப் பற்றியும், இறுதித் தீர்ப்பைப் பற்றிய வெளிப்பாடும் உள்ளடங்கியுள்ளது. எதிர் காலத்தில் வரவிருக்கின்ற புதிய அரசின் - ஆட்சி தாழ்மையான பணிவுள்ளம் கொண்ட அரசரின் ஆளுமையில் நிகழ்வதாகும். பிற இனத்தவர்களுக்கு சமாதானத்தினைக் கொண்டு வரும் யுகத்தினை எதிர்பார்த்து அகமகிழும்படி தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களுக்கு செக்கரியா இறைவாக்கினர் கூறுகின்றார்.

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

அவ்வேளையில் இயேசு தந்தையே விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே! உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் இவற்றை மறைத்துக் குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம் தந்தையே, இதுவே உமது திருவுளம். என் தந்தை எல்லாவற்றையும் என்னிடத்தில் ஒப்படைத்துள்ளார். தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினார். மேலும் அவர், பெருஞ் சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லாரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.....

**ஒளியின் விழிப்புறுதல்**

1989ம் பயங்கரமிகு காலத்தில் குளியாபிட்டிய கனதுல்ல தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விடுதலை பெற்றவருக்கு தம் வீட்டிற்குச் செல்லுவதற்கு அனுமதி கிடைக்க வில்லை. ஏனென்றால், அவ்வேளையில் அவரை கொன்று எரித்துப் போடுவதற்கு படையினர் இடைவழியே உள்ளனர் என்று அறிந்தனர். புத்தளத்திலிருந்து வந்த மரக்கறி லொறியுள் மறைந்த வண்ணம் தனது உறவின சகோதரர் ஒருவரின் இல்லத்திற்கு சென்று ஒளிந்து வாழ்ந்த இவருக்கு வாழ்க்கை வெறுப்பாடைந்தது. தற்கொலை செய்ய மனம் வந்தது. அந்த இறுதிக் கணத்தில் தனிமையில் இருப்பினும் தனிமை-யில்லை... என அவர் முகாமில் இருந்த போது கேட்ட இப்பாடல் இவருக்குள் எதிரொலிக்கத் தொடங்கியது. அக்கணத்தில் தன் கழுத்தைச் சுற்றி போடப்பட்ட கயிற்றைக் கடற்றி விட்டு செய்வதறியாது பல மணிநேரம் அலைந்து திரிகையில் ஒரு கட்டிடத்தில் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாற்றி தருவேன் என்ற வார்த்தையை இவர் கண்டார். ஆண்டவரின் வழி நடத்துதலினால் ஸ்ரீ பிரசன்சாராமயவை தேடி வந்த இவர் எவ்வித வார்தையையும் பேச முடியாமல் நீண்ட நேரம் எம் முன் இருந்தது என் கண் முன் தோன்றிது. அதன்பின் ஒரு கட்டிடத்தில் தான் கண்ட வார்த்தை தனக்கு தாக்கத்தைக் கொடுத்ததாக அவர் சொன்னார். எப்படியே ஆண்டவர் தாமே தன்னை இங்கே அழைத்து வந்தார். இப்போ நான் மாபெரும் ஆறுதலை அனுபவிக்-கின்றேன். நான் வாழ வேண்டும் வாழ்க்கையை அழிப்பது பதிலல்ல. என்றார். இப்போது இவர் பிற மதத்தவர்கள் சூழலில் மறைந்து வாழும் கிறிஸ்தவராவார்.

**இரண்டாம் செபம்**

பிதாவானவரின் வாக்குறுதி-யாகிய இயேசு ஆண்டவரே! நீர் எமக்களிக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்றமையால் நாம் உம்மைப் போற்றிப் புகழ்கின்றோம்.

**இரண்டாம் வெளிப்பாடு**

ஆனால் கடவுளின் ஆவி உங்களுள் குடிகொண்டிருந்ததால், நீங்கள் ஊனியல்பைக் கொண்டிராமல், ஆவிக்குரிய இயல்பைக் கொண்டி-ருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிராதோர் அவருக்கு உரியோ-ரல்ல.... ஆகையால் சகோதர சகோ-தரிகளே! நாம் ஊனியல்பிற்குக் கடமைப்பட்டிருக்கவில்லை. அவ்வியல் பின் படி வாழ வேண்டியதில்லை....

**மூன்றாம் செபம்**

தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன். நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்.

**நாளின் நோக்கம்**

0 **தனிப்பட்டோருக்காக செபிக்கவும்**

0 **அவர்களை சந்தித்து நற்செய்தியை அவர்களுடன் பகிரவும்**

0 **இன்றைய வெளிப்பாட்டை வாசித்து வாக்குறுதியை உரிமையாக்கிக் கொண்டு அதனுள் வாழவும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 2011 ஆடி 04 திங்கள் | | லூஸ்தானியா நகர் தூய எலிசபெத்தம்மாள் |
| தொ. நூல் | தி.பாடல் | பு. மத்தேயு |
| 28:10-22 | 91:1-4,14-15, | 9:18-26 |

**பரி. நற்செய்தியிலிருந்து**

*அவர்களுடன் இவ்வாறு இயேசு பேசிக்கொண்டிருந்த பொழுது தொழுகைக் கூடத் தலைவர் ஒருவர் அவரிடம் வந்து பணிந்து என் மகள் இப்பொழுது தான் இறந்தாள். ஆயினும் நீர் வந்து அவள் மீது உம் கையைவையும். அவள் உடனே உயிர் பெறுவாள் என்றார். இயேசு எழுந்து அவர் பின்னே சென்றார். இயேசுவின் சீடர்களும் அவரைப் பின் தொடர்ந்தனர். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியில் விழிப்புறுதல்**

இறை வார்த்தையூடாக நம்பிக்கை கொண்டோரையும், நம்பிக்கையற்றோரையும் எடுத்துக் காட்டப்படுகின்றது. தொழுகைக் கூட்டத் தலைவர் பரிவுடன் இறைவனில் பற்றுறுதி கொண்டு விசுவாசத்துடன் தம் மகளை தொடும்படி கூறுகிறார். இறந்த அவருடைய மகள் உயிர்பெறுகிறாள். பன்னிரண்டு வருடங்களாய் இரத்தப் போக்கினால் வருந்திய பெண் உடைந்த உள்ளத்துடன் ஆண்டவரின் ஆடையைத் தொட்டாலே போதும் நலம் பெறுவேன் என நம்பினாள். தொட்டாள் நலமடைந்தாள். அவளின் அஞ்சுதலைக் கண்டு துணிவோடிரு என்று கூறினார். அத்துடன் குழல் ஊதிய கூட்டத்தினர் அவரைப் பார்த்து நகைத்ததைக் கண்டு இவர்களின் பரிசுத்த மின்மையைக் கண்டு வேதனைப்பட்டிருப்பார்.

எம் பேரில்

கடவுளை இழிவு செய்ய நினைக்காமல் நாம் எம்முடைய துன்ப துயர நிலைகளில் இயேசுவே ஆண்டவர் என்று வாயார அறிக்கையிட்டு நம்பிக்கையோடு கேட்போமானால் இயேசுவின் வல்ல செயல்களைக் காண்போம். வாழ்வும் வழியும் உண்மையுமான இயேசுவை காண்போம்.

எங்கள் விசுவாசத்தின் அளவு எவ்வளவு என்பதைச் சிந்திப்போம். இயேசு என்னை அன்பு செய்கின்றார். என்னால் அவரை அன்பு செய்ய முடியுமா? அவர் ஆடையைத் தொட்ட பெண் குணமடைந்தார். இயேசு என்னைத் தொட நான் இடம் அளித்தால்!.... விழிப்புடன் செயல்பட வரம் வேண்டுவோம்.

**செபம்**

அன்பின் இயேசுவே! எமது விசுவாசமற்ற தன்மையை நீக்கியருளும். நாம் எமது இதயத்தால் உம் இதயத்தைத் தொடவும், நீர் உமது கரங்களால் எம் உடலையும் மனதையும் தொடவதற்கு இடமளிக்கும் மனபக்குவத்தை உமது ஆவியின் வழியாகத் தந்தருளும் ஆமென்.

*அவர்கள் என் மீது அன்பு கூர்ந்தால் அவர்களை விடுவிப்பேன். அவர்கள் என்னை நோக்கி மன்றாடும்போது அவர்களுக்கு பதில் அளிப்பேன். அவர்கள் துன்பத்தில் அவர்களோடு இருப்பேன். அவர்களை தப்புவித்து அவர்களை பெருமைப் படுத்துவேன்.*
(திரு.பா. 91:1-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன் நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்**

| 2011 ஆடி 05 செவ்வாய் | | |
|---|---|---|
| தொ.நூல் | தி. பாடல் | பு. மத்தேயு |
| 32:22-32 | 17:1-3,6-8,15 | 9:32-38 |

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

*அவர்கள் சென்ற பின் பேய் பிடித்துப் பேச்சிழந்த ஒருவரைச் சிலர் இயேசுவிடம் கொண்டு வந்தனர். பேயை அவர் ஓட்டியதும், பேச இயலாத அவர் பேசினார். மக்கள் கூட்டத்தினர் வியப்புற்று, இஸ்ரயேலில் இப்படி ஒருபோதும் கண்டதில்லை என்றனர்.... அப்பொழுது அவர் தம் சீடரை நோக்கி அறுவடை மிகுதி, வேலையாள்களோ குறைவு. ஆகையால் தேவையான வேலையாள்-களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள் என்றார்... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**முதல்வெளிப்பாட்டிலிருந்து**

யாக்கோபு, நீர் எனக்கு ஆசி வழங்கினாலொழிய உம்மை போகவிடேன் என்று மறுமொழி சொன்னார். அவர் உன் பெயர் என்ன? என, அவர் நான் யாக்கோபு என்றார். அப்பொழுது அவர் உன் பெயர் யாக்கோபு எனப்படாது. இஸ்ரயேல் எனப்படும் ஏனெனில், நீ கடவுளோடும், மனிதரோடும் போராடி வெற்றிக் கொண்டாய் என்றார்.

**ஒளியில் விழிப்புறுதல்**

தூய ஆவியானவரே, நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன். நான் செய்ய வேண்டியது என்ன? என்று எனக்கு ஆணையிட்டருளும். இந்த நாளிலே இந்த வார்த்தைகளைத் தியானித்து அதை வாழ்வாக்க உதவி புரியும்.

இறைபணிக்கு மக்கள் குறைவைக் காணும் இயேசு அப்பா தந்தையை நோக்கிச் செபிக்க வேண்டுகிறார். ஆயனற்ற ஆடுகளைக் கண் காணிப்பது எம் ஒவ்வொருவரின் பொறுப்பும் கடமையுமாகும். உண்மைக் கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்கு சான்று பகிர வேண்டும். தூய ஆவியின் கொடைகளையும் கனிகளையும் எமக்குத் தந்து நோக்கில் விழிப்புறுவே நாம் செயல்பட அழைப்பு விடுக்கின்றார்.

**எம் பேரில்**

வாழ்வளிக்கும வள்ளலே, இன்று யாக்கோபு கடவுளோடும் மனிதரோடும் போராடும் மனப்பாங்கை காண்பிக்கின்றீர். எமது இயலாமை, முடியாமை, மனசஞ்சலத்தில் சிக்கித் தவிக்கையில் எமது உள்ளத் துணையும் நீரேயாவீர். நாங்கள் உம்மோடு இணைந்து உமது வார்த்தை வாக்குறுதியை உணவாக்கி வாழ்வை வெற்றிக் கொள்ள உம் மகன் இயேசுவின் மூலம் என்னைப் பொலப்படுத்தும கிறிஸ்துவில் எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு வரம் தாரும்.

**செபம்**

இறைவா நான் உம்மை நோக்கிக் கூப்பிடுகின்றேன். ஏனெனில் நீர் எனக்கு பதில் அளிப்பீர். என் பக்கம் உம் செவியைத் திருப்பியருளும். என் விண்ணப்பத்திற்குச் செவி சாய்த்தருளும் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன்**
**நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்**

| | | |
|---|---|---|
| **2011 ஆடி 06 புதன்** | கன்னியும் வேதசாட்சியுமான தூய மரிய கொறற்றி | |
| **தொ. நூல்** | **தி.பாடல்** | **பு. மத்தேயு** |
| **41:56-57,42:5-7,17-24** | **33:2-3,10-11,18-19** | **10:1-7** |

**பரி. நற்செய்தியிலிருந்து**

*இயேசு தம் சீடர் பன்னிருவரையும் தம்மிடம் வரவழைத்தார். தீய ஆவிகளை ஓட்டவும் நோய் நொடிகளைக் குணமாக்கவும் அவர்களுக்கு அதிகாரம் அளித்தார்...... பிற இனத்தாரின் எப்பகுதிக்கும் செல்ல வேண்டாம் சமாரியாவின் நகர் எதிலும் நுழைய வேண்டாம். மாறாக வழி தவறிப் போன ஆடுகளான இஸ்ரயேல் மக்களிடமே செல்லுங்கள். அப்படிச் செல்லும் போது விண்ணரசு நெருங்கி வந்து விட்டது எனப் பறை சாற்றுங்கள். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியில் விழிப்புறுதல்**

மனித பெலயீனங்களை பரிசுத்த ஆவியானவரது ஒளியுடன் இனங் கண்டவரான இயேசு, தமது போதனைகள் வழியாக சிறிய சிறிய அனுபங்களுக்கு உள்ளாகி படிப்படியாக வளர்ந்து வரும் தமது சீடர்களை இக்கட்டான நிலைகளுக்கு ஆளாகி தவிக்க விடாமல் பாவத்தை உணர்ந்து மனந்திரும்பும் மக்களிடம் மட்டுமே அனுப்புகின்றார். தமது சீடர்களைப் பற்றி பரிசேயரும் மறைநூல் அறிஞரும் விதவிதமான கருத்துக்களை கொண்டிருந்தாலும் மிருதுவான மனங்களுடன் புதியதாக விரிவடைய தமது சீடர்களை கண்காணித்துக் கொள்கின்றார். பரிசேயர் தங்கள் பாவங்களை நியாயப் பிரமாணச் சட்டங்களாக ஏற்றுக்கொள்வதை ஆண்டவர் கண்டிக்கின்றார். யூத மார்க்கச் சட்டங்களை கடுமையாக கடைப்பிடித்து வருவதைக் கண்டு மனம் வருந்துகின்றார். தமது சீடர்களை தூதுரப் பணிக்காக அவர்களிடம் அனுப்பாமல், தாமே சந்தர்ப்பத்தை எதிர்ப்பார்த்திருந்திருப்பார் போலும்.

**எம் பேரில்**

திருச்சட்ட வல்லுனர்கள் அன்று மக்களுக்கு பற்பல சட்டதிட்டங்கள் நீதி நெறிகள் அனைத்தையும் கற்பித்து கீழ்ப்படிந்து நடக்கவும் அதன்படி வாழவும் கட்டாயப்படுத்தினர். அதனால் மக்கள் துன்புற்றார்கள், வேதனையடைந்-தார்கள். இயேசுவோ அவை அனைத்திற்கும் மாறுபட்டவராக செயற்பட்டார். ஒதுக்கப்பட்டோரை தேடி அவர்களின் குறைகளை நீக்கி அவர்களுக்கு அன்பு செய்தார். எமது சங்கம வாழ்க்கையில் எமது சீடத்துவ சங்கங்களில் சமாதானத்தையும் விடுதலையையும் தேடிவரும் மக்களை நாம் எந்தவகையில் ஏற்று அவர்க-ளுக்கு ஆறுதல் பெற செயற்படுகின்-றோம். ஆண்டவரின் அன்பை பெற்று வாழ்க்கையில் நிலைத்து நிற்க உதவி புரிகின்றோமா? அல்லது அவர்களை புறக்கணித்து நாம் மேம்பட்டவர்கள் என்று பெறுமை கொள்கின்றோமா? தூய ஆவியானவருக்கு விழிப்புற்று தியானத்தில் ஈடுபடுவோம். நாங்கள் இருக்கும் பாவ நிலையை அறிந்து தூய ஆவியானவரின் வல்லமையை வேண்டி செபிப்போம்.

கடவுளை இழிவு செய்ய நினைக்காமல் நாம் எம்முடைய துன்ப துயர நிலைகளில் இயேசுவே ஆண்டவர் என்று வாயார அறிக்கையிட்டு நம்பிக்கையோடு கேட்போமானால் இயேசுவின் வல்ல செயல்களைக் காண்போம். வாழ்வும் வழியும் உண்மையுமான இயேசுவை காண்போம்.

**செபம்**

அன்பின் தந்தையே! உலகம் புறக்கணிக்கிறவர்களை நான் அன்பு செய்து உமது அன்புக்கு சாட்சி பகிர்ந்திட வல்லமைப்படுத்தியருளும். மன உறுதியுடன் அவர்களை ஏற்று அரவணைப்பதற்கான நல்ல மனதை தந்தருளும் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன்
நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்

2011 ஆடி 07 வியாழன்

| தொ.நூல் | தி. பாடல் | பு. மத்தேயு |
|---|---|---|
| 44:18-21,23-29,45:1-5 | 105:16-21 | 10:7-15 |

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

*விண்ணரசு நெருங்கி வந்து விட்டது எனப் பறைசாற்றுங்கள். நலம் குன்றியவர்களைக் குணமாக்குங்கள். இறந்தோரை உயிர்த்தெழச் செய்யுங்கள். பேய்களை ஓட்டுங்கள். கொடையாகப் பெற்றீர்கள். கொடையாகவே வழங்குங்கள். பொன் வெள்ளி, செப்புக் காசு எதையும் உங்கள் இடைக்கச்சையில் வைத்துக் கொள்ள வேண்டாம். இரண்டு அங்கியோ, மிதியடிகளையோ எடுத்துக் கொண்டு போக வேண்டாம். ஏனெனில் வேலையாள் தம் உணவிற்கு உரிமை உடையவரே. நீங்கள் எந்த நகருக்குச் சென்றாலும் அங்கே உங்களை ஏற்கத் தகுதியுடையவர் யாரெனக் கேட்டறியுங்கள். அங்கிருந்து புறப்படும் வரை அவரோடே தங்கியிருங்கள்.... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியின் விழிப்புறுதல்**

பல சீடர்கள் இருந்தாலும் பன்னிருவரையே அவர் தெரிந்து கொள்கின்றார். தெரிந்து கொண்டவர்களுக்குக் கொடைகளை இலவசமாகக் கொடுக்கின்றார். நற்செய்தியைப் பறைசாற்றுமாறு அவர்களை அனுப்புகின்றார். அனுப்புவதற்கு முதல் அவர்களுக்குச் சில அறிவுரைகளையும் கூறுகின்றார். தெரிந்து கொண்டவர்களுக்கு பல ஒழுங்கு முறைகளைக் கற்றுக் கொடுக்கின்றார். இறையரசின் நற்செய்தியை ஏனோ தானோ என்று பறைசாற்ற முடியாது. நாம் எக்கணமும் இயேசுவை உற்று நோக்க வேண்டும். எம் செவி அவருடைய குரலொலிக்குச் செவி சாய்க்க வேண்டும். அவர் சொல்வதை மட்டுமே செய்ய வேண்டும். இதுவே உண்மையான சீடனுக்கு இருக்க வேண்டிய இலட்சணங்கள். நான் என்ற எண்ணம் முழுமையாக என்னில் இருந்து களையப்பட வேண்டும்.

**எம் பேறில்**

எம்மை ஒரு கணம் திரும்பிப் பார்ப்போம். இன்று நாம் இலவசமாகப் பெற்றுக்கொண்ட இறைவனின் கொடைகளை இலவசமாகக் கொடுக்கின்றோமா? அல்லது கொடைகளின் மூலமாக எம்மை மகிமைப்படுத்திக் கொள்கின்றோமா? இன்று இலவசமாக இறையரசின் இலட்சணமாகக் கொடுக்கப்பட்ட கொடையை தங்களுடைய மகிமைக்காகவும் உழைப்பிற்காகவும் பயன்படுத்துகின்றவர்கள் பல பேர் இருக்கின்றார்கள். இறைவனுக்குக் கொடுக்கவேண்டிய மகிமையை இறைவனுக்கே கொடுப்போமாக. ஏனென்றால் நாம் வெறும் கருவிகள் மட்டுமே.

**செபம்**

இறை இயேசுவே, உம்முடைய தூதுச்சேவையைச் செய்வதற்காக நீர் எம்மை அழைத்திருக்கின்றீர். அதற்காவே உம்முடைய கொடைகளையும் எமக்கு அளித்திருக்கின்றீர். இதனைப் பயன்படுத்தி உம்முடைய அரசைக் கட்டி யெழுப்புவதற்கு உம்முடைய ஆவியின் வல்லமையை அதிகமதிகமாக அளித்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2011 ஆடி 08 வெள்ளி | | |
|---|---|---|
| தொ. நூல் | தி.பாடல் | பு. மத்தேயு |
| 46:1-7,28-30 | 37:3-4,18-19,22-28,39-40 | 10:16-23 |

**பரி. நற்செய்தியிலிருந்து**

*இதோ ஓநாய்களிடையே ஆடுகளை அனுப்புவதைப் போல நான் உங்களை அனுப்புகிறேன். எனவே பாம்புகளைப் போல முன்மதி உடையவர்களாகவும், புறாக்களைப் போலக் கபடு அற்றவர்களாகவும் இருங்கள். எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் மனிதர்கள் உங்களை யூதச்சங்கங்களிடம் ஒப்புவிப்பார்கள். தங்கள் தொழுகைக் கூடங்களில் உங்களைச் சாட்டையால் அடிப்பார்கள். என்பொருட்டு ஆளுநர்களிடமும் அரசர்களிடமும் உங்களை இழுத்துச் செல்வார்கள். இவ்வாறு யூதர்கள் முன்னும் பிற இனத்தவர் முன்னும் சான்று பகர்வீர்கள். இப்படி அவர்கள் உங்களை ஒப்புவிக்கும் பொழுது என்ன பேசுவது? எப்படிப் பேசுவது? என நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்ன பேச வேண்டும் என்பது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். ஏனெனில் பேசுபவர் நீங்கள் அல்ல, மாறாக உங்கள் தந்தையின் ஆவியாரே. உங்கள் வழியாய்ப் பேசுவார்......, மானிட மகனின் வருகைக்கு முன் நீங்கள் இஸ்யேலின் எல்லா நகர்களையும் சுற்றி முடித்திருக்க மாட்டீர்கள் என உறுதியாகவே உங்களுக்குச் சொல்கிறேன். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியில் விழிப்புறுதல்**

தூய ஆவியானவரே! உம்மை வாழ்த்தி வணங்கி நமஸ்கரிக்கின்றேன். இந்நற்செய்தி வாசகத்தைப் புரிந்து கொள்ள வரம் தாரும். இறைமகனாம் இயேசுகிறிஸ்து ஆண்டவர் தம்மோடு இருக்கும் சீடர்களுக்கு விழிப்புறும் கொடையைப் பொழிகின்றார். அவர் வாழ்ந்த காலத்தில் அவருக்கு ஏற்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும் அவரை வழிநடத்த தூய ஆவியானவர் செயலாற்றிய விதங்களை சித்திரமாகக் கண்டார். அவரால் மறக்கவும் முடியாத பயங்கர சம்பவங்களை கண்டு அனுபவித்து அப்பா தந்தை அவருக்குள் செயல் புரிந்த விதமோ ஆச்சரியமானதாகும் என உணர்ந்தார். ஏனெனில் நானும் தந்தையும் ஒன்றே என்ற தனியாத தாகமே அவரை முன்னோக்கிச் செல்வதற்கு வல்லமை அளித்தது.

**எம் பேரில்**

யார் தூய ஆவியானவரால் வழிநடத்தப்படுகின்றார்களோ அவர்களே தந்தை இறைவனின் மக்கள். தந்தையின் அன்பின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இந்த உரிமை நமக்கு உண்டா? தூய ஆவியானவரின் செயல்பாடுகளை நம் தனிப்பட்ட வாழ்வில், குடும்பத்தில், சங்கத்தில் அனுபவிக்கின்றோமா? தூய ஆவியானவர் யார் எனத் தெரியாமல் வாழ்ந்த நம்மை அவர் முன் குறித்து அழைத்து அருகில் வைத்து அவரது புகழைப்பாட நம்மை தூயவர்களாகவும் மாசற்றவர்களாகவும் வாழ்வதற்கு இயேசு கிறிஸ்து ஆண்டவர் வழியாக நம்மை அழைத்துள்ளார் என உணருகிறோமா?

**செபம்**

அப்பா தந்தையே! உம் தூய மகனின் அன்பினால் எம் ஒவ்வொருவரையும் புதுப்பித்து நாம் இன்பத்திலும் துன்பத்திலும் உமக்குச் சாட்சிபகிருவதற்கு உம் தூய ஆவியினால் எப்போதும் எம்மை வழிநடத்தியருளும் தந்தையே! ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன்**
**நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்**

| | | |
|---|---|---|
| 2011 ஆடி 09 சனி | | |
| தொ.நூல் | தி. பாடல் | பு. மத்தேயு |
| 49:29-32,50:15-26 | 105:1-4,6-7 | 10:24-33 |

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

*சீடர் குருவை விடப் பெரியவர் அல்ல. பணியாளரும் தம் தலைவரைவிடப் பெரியவர் அல்ல. சீடர் தம் குருவைப் போல் ஆகட்டும். பணியாளர் தம் தலைவரைப் போல் ஆகட்டும். அதுவே போதும். வீட்டுத் தலைவரையே பெயல்செபூல் என அழைப்பவர்கள் வீட்டாரைப்பற்றி இன்னும் தரக் குறைவாகப் பேசமாட்டார்களா? எனவே, அவர்களுக்கு அஞ்ச வேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள்... மக்கள் முன்னிலையில் என்னை ஏற்றுக்கொள்பவரை விண்ணுலகில் இருக்கும் என் தந்தையின் முன்னிலையில் நானும் ஏற்றுக்கொள்வேன். மக்கள் முன்னிலையில் என்னை மறுதலிப்பவன் எவரையும் விண்ணுலகில் இருக்கிற என் தந்தையின் முன்னிலையில் நானும் மறுதலிப்பேன். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியின் விழிப்புறுதல்**

சீடர் தம் குருவைப் போல் ஆகட்டும் தாம் தந்தையின் அணுவேனும் பிசகாது நிறைவேற்றியதைப் போல, தமது சீடர்களும் தம்மைப் போலவே தந்தையின் திருவுளத்தை அறிந்து நிறைவேற்ற வேண்டும் என்று இறைமகன் ஆசிக்கின்றார். தந்தையின் அதி உன்னதமான நிலை, பரிசுத்த தன்மை, அவருக்குக் காண்பிக்க வேண்டிய தெய்வ பயம், இறைவனானவர் மனித சமூகம் உட்பட அனைத்தும் பற்றி மக்களுக்கு விளங்கக் கூடிய விதத்தில் மொழிகின்ற வார்த்தைகள் ஊடாக தந்தை மகனின் ஆழமான உறவு தெளிவாக்கப்படுகிறது.

கிறிஸ்துநாதர் வழியாக நாம் பெற்றுள்ள புத்தரத்தன்மையின் அனுபவம் ஊடாக எப்போதும் தந்தையுடனான உறவினை வளர்த்துக் கொள்ள வேண்டும். விசுவாசக் கண்களின் காரணமாக நாம் பெறுகின்ற அனுபவங்கள் வாயிலாக தந்தையின் அன்பினை இனம் கண்டுள்ளோம். அனைத்துப் படைப்புக்கள் வழியாகவும் நாம் படைப்பாளரையே காண்கின்றோம். இவை போன்ற அனுபவங்கள் இறை வார்த்தை என்பனவற்றை உதவியாகக் கொண்டு அரசினைக் கட்டியெழுப்புவதற்காக வேண்டி எம்மைத திருப்பொழிவு செய்யுமாறு வேண்டுவோம்.

**எம் பேரில்**

நாம் யாருக்கு அஞ்ச வேண்டும்? என்னை வழிநடத்தும் தூய ஆவியானவர் என்னுள், என்னோடு இருக்கின்றார். அவரே என் பாதுகாவல். என் ஆயன் இயேசு என்னோடு. அவரை நம்பிக்கையோடு பின்தொடர்வோம். அப்போது விண்ணகத்தில் இயேசு எமக்காக விண்ணகத் தந்தையிடம் பரிந்து பேசுவார். நாமும் இறைவாழ்வை பெற்றுக் கொள்வோம்.

**செபம்**

அவர் தம் திருப்பெயரை மாட்சிப்படுத்துங்கள். ஆண்டவரைத் தேடுவோரின் இதயம் அக்களிப்பதாக! ஆண்டவரையும் அவரது ஆற்றலையும் தேடுங்கள்! அவரது திருமுகத்தை இடையறாது நாடுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 2011 ஆடி 10 ஞாயிறு | | பொ.கா.15வது ஞாயிறு |
| எசாயா 55:10-11 | தி.பாடல் 65:9-13 | பு. மத்தேயு 13:1-23 |

இன்றைய நாளுக்குரிய வெளிப்பாடுகள் அனைத்தும் இயற்கையோடு தொடர்புடையனவாகத் தோன்றுகின்றன. மகா உன்னதருடைய வார்த்தைகளை மழைக்கும், விதைக்கும் ஒப்பிட்டுள்ளார்கள். வார்த்தைகள் மீது தரித்திருந்து வாழ்வதையே பயனளித்தலாகக் குறிப்பிட்டுள்ளார்கள். இந்தப் பயன் தருகின்ற வார்த்தைகளை நாம் அனுபவிப்பதே இறைவனுடைய விருப்பமாக இருக்கின்றது.

இறை வார்தைகளைப் பற்றி பல விளக்கவுரைகளோடு எழுவதிலும், அதன் ஆழத்தை இதயத்தினாலேயே ஸ்பரிசித்து, அதனை உரிமையாக்கிக்கொள்வதே எனது விருப்பமாக இருக்கின்றது. அதனால் இன்றைய முதலாவது வெளிப்பாடானது குறிப்பிடுவதற்கமைய இறைவனுடைய வார்த்தையானது பயன்தராது மீளத் திரும்பாத படியாலும் பரிசுத்த நற்செய்தி வெளிப்பாட்டிற்கமைய விதையானது நூறு வீதமாக, அறுபது வீதமாக, முப்பது வீதமாக பயன்தந்தது போல நாமும் பயனளிக்கும் விதைகளாவதற்கான ஆசையை ஏற்படுத்திக் கொள்வோம், தாகங் கொள்வோம்.

**முதலாவது வெளிப்பாட்டிலிருந்து**

மழையும் பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து, முளை அரும்பி வளரச் செய்து, விதைப்பவனுக்கு விதையையும் உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல் அங்கு திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே, என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தைச் செயல்படுத்தி, எதற்காக நான் அதை அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை.

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

*அதே நாளில் இயேசு வீட்டிற்கு வெளியே சென்று கடலோரத்தில் அமர்ந்தார். மக்கள் பெருந்திரளாய் அவரிடம் ஒன்று கூடி வந்தனர். ஆகவே அவர் படகில் ஏறி அமர்ந்தார். திரண்டிருந்த மக்கள் அனைவரும் கடற்கரையில் நின்று கொண்டிருந்தனர். அவர் உவமைகள் வாயிலாகப் பலவற்றைக் குறித்து அவர்களோடு பேசினார். விதைப்பவர் ஒருவர் விதைக்கச் சென்றார். அவர் விதைக்கும்போது சில விதைகள் வழியோரம் விழுந்தன. பறவைகள் வந்து அவற்றை விழுங்கி விட்டன. வேறு சில விதைகள் மிகுதியாக மண் இல்லாப் பாறைப் பகுதிகளில் விழுந்தன. அங்கே மண் ஆழமாக இல்லாததால் அவை விரைவில் முளைத்தன. ஆனால் கதிரவன் மேலே எழ அவை காய்ந்து, வேரில்லாமையால் கருகிப் போயின... இன்னும் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவற்றுள் சில நூறு மடங்காகவும் விளைச்சலைக் கொடுத்தன. கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும் என்றார்.*

**ஒளியின் விழிப்புறுதல்**

முதலாவது வெளிப்பாட்டினைத் தியானிக்கும்போது எம்முள் ஒரு விதமான மகிழ்ச்சி ஏற்படுகின்றது. ஏனெனில், ஆண்டவரது வார்த்தைகள் கட்டாயமாகப் பயனளிக்கும் என்பதனாலாகும். எமது எதுவிதமான பங்களிப்பும் இல்லாமலேயே அது நிகழ்கின்றது என்பதே எமது மகிழ்ச்சிக்கான பிரிதொரு காரணமாகும். ஆயினும் பரிசுத்த நற்செய்தி வெளிப்-பாடானது எமக்கு உண்மையைத் தெளிவுபடுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது இறைவார்த்தை மனிதனுள் விதைக்-கப்பட்டால் மாத்திரம் போதாது. அது பயனளிப்பதற்கான சூழலும் தேவைப்படுகிறது. திருச்சபைத் தாயா-னவள் அந்தச் சூழலை எமக்கு உரு-வாக்கித் தருகின்றது. எமது குடும்ப சூழல் பண்பட்ட நிலமாக இருக்கின்-றதா? இறைவார்த்தையைப் பறித்தெடுக்-கின்ற தீயவனின் தந்திரங்கள் பேரில் விழிப்புடனா இருக்கின்றோம்? தாமே நல்ல நிலமாவதற்குத் தடையாக இருப்பவற்றை இனங்கண்டுகொண்டு, அவற்றிலிருந்து மீளுவதற்கான படிக-ளை எடுத்துள்ளோமா? ஒப்புரவின் திருவருட்சாதனம் பேரில் அக்கறையுள்-ளவர்களாகவா இருக்கின்றோம்.

இறைவார்த்தையை ஏற்றுக் கொண்டாலும், அது உரிய விதத்தில் மனுவுருவாகி இருக்கின்றதா? அப்படி இல்லாது விட்டால் இறை வார்த்தை காரணமாக வருகின்ற துன்ப துரிதங்கள் இக்கட்டு இடையூறுகள் என்பனவற்றைத் தாங்கிக் கொள்வதன் மாபெரும் மகிழ்ச்சியை அனுபவித்திராத படியால், துன்ப துரிதங்கள் அற்ற இன்ப உலகில் வாழ்வதற்கு எமக்குள் இருக்கின்ற பேராசை காரணமாக நாம் இறைவ-னிடமிருந்து விலகியிருப்போமேயானால் அதற்காக இப்போது மனம் வருந்துவோம்.

எப்படியான போதிலும், முதலாவது வெளிப்பாடானது எமக்குத் தருகின்ற சக்தியத்தை ஒதுக்கிவிட முடியாது. அதாவது இறைவனது வார்த்தை ஒருபோதும் பயனளிக்காது விடும் என்பதாகும். அது பயன் தரும். எப்போதாயினும் பயன்தந்தே தீரும். மனித நிலையில் தோல்வியுற்றதின் ஊடாகவும் கூட இறைவார்த்தை செயற்பாடாகும். அது கண்களுக்குப் புலனாகாத போதும் ஏதாவதொரு நாளில் நிறைவேறியே தீரும்.

**இரண்டாவது வெளிப்பாட்டிலிருந்து**

இக்காலத்தில் நாம் படும் துன்பங்கள் எதிர் காலத்தில் நமக்காக வெளிப்படப் போகிற மாட்சியோடு ஒப்பிடத் தகுதியற்றவை என நான் எண்ணுகிறேன். இம்மாட்சியுடன் கடவுளின் மக்கள் வெளிப்படுவதைக் காண்பதற்காகப் படைப்பே பேராவலோடு காத்திருக்கிறது. ஏனெனில், படைப்பு பயனற்ற நிலைக்கு உட்பட்டுள்ளது. நானே விரும்பியதால் அப்படி ஆகவில்லை. அதை உட்படுத்தினவரின் விருப்பத்தால் அவ்வாறு ஆயிற்று. எனினும், அது எதிர்நோக்கை இழந்த நிலையில் இல்லை. அது அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு கடவளின் பிள்ளைக-ளுக்குரிய பெறுமையையும், விடுதலை-யையும் தானும் பெற்றுக் கொள்ளும் என்கிற எதிர் நோக்கோடு இருக்கிறது....

**ஒளியின் விழிப்புறுதல்**

மனிதரென்ற விதத்தில் இவ்வுலக காரியங்கள் பேரில் எத்துணை கவலைப்படுகின்றோம்? இத்துன்பங்-களிலும் புத்திரத்தன்மையோடு கிடைக்கப்பெறுகின்ற மாட்சிமையைப் பற்றிய சிறு உணர்வையேனும் ஏற்ப-டுத்தக் கொள்வதற்கு முடியுமானால் நாம் எத்துணை பேறுபெற்றவர்-களாவோம். இறைமக்களாக இயேசு நாதர் எமக்கு உரிமையாக்கித் தந்துள்ள மாட்சி மிகு நிலைவாழ்வுக்காக வேண்டி நாம் இறைவனைப் புகழ்வோம். அதன் எதிர்பார்ப்பில் உறுதியுடன் இருப்ப-தற்கான வல்லமையை வேண்டுவோம்.

**செபம்**

படைப்பாளரான தூய ஆவியானவரே, இறை வார்த்தையை பயனளிக்கச் செய்பவரே, எம்மை நிதமும் விழிப்புறுதலோடு வைத்தி-ருப்பீராக! தீயவனது சோதனைகளுக்கு அகப்பட்டாதிருப்பதற்கான வல்ல-மையைத் தருபவரும் நீரே! இறையர-சுக்காக வேண்டி அதிகமதிமாகப் பயனளிக்கச் செய்வீராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன் நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்**

| 2011 ஆடி 11 திங்கள் | | ஆதினத் தலைவர் தூய ஆசிவர்வாதப்பர் நினைவு |
|---|---|---|
| வி. பயணம் | தி.பாடல் | பு. மத்தேயு |
| 1:8-14,22 | 124:1-8 | 10:34-11:1 |

**பரி. நற்செய்தியிலிருந்து**

*நான் உலகிற்கு அமைதி கொணர வந்தேன் என எண்ண வேண்டாம், அமைதியை அல்ல, வாளையே கொணர வந்தேன். தந்தைக்கு எதிராக மகனையும், தாய்க்கு எதிராக மகளையும், மாமியாருக்கு எதிராக மருமகளையும் நான் பிரிக்க வந்தேன்.... உங்களை ஏற்றுக் கொள்பவர் என்னை ஏற்றுக் கொள்வார். என்னை ஏற்றுக் கொள்பவரோா, என்னை அனுப்பியவரையே ஏற்றுக் கொள்கிறார்... இச்சிறியோருள் ஒருவருக்கும் அவர் என் சீடர் என்பதால், ஒரு கிண்ணம் குளிர்ந்த நீராவது கொடுப்பவரும் தம் கைமாறு பெறாமல் போகார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இயேசு தம் பன்னிரு சீடருக்கும் அறிவுரை கொடுத்து முடித்ததும், பக்கத்து ஊர்களில் கற்பிக்கவும் நற்செய்தியை அறிவிக்கவும் அவ்விடம் விட்டு அகன்றார். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியில் விழிப்புறுதல்**

இந்நற்செய்தியினை ஆழமாகத் தியானிப்பதற்கும், எமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் உள்ளாந்தரத்தைக் காண்பதற்கும் தூய ஆவியானவரே! எனக்கு உதவி செய்தருளும்.

நான் உலகிற்கு அமைதியை அல்ல வாளையே கொணர வந்தேன் என்ற இறைவார்த்தையின் ஊடாக பிளவை ஏற்படுத்துவேன் என்று அவர் கூறினாலும், அந்தப் பிளவிலும் ஒரு மகிழ்ச்சி வரும் என்பதனைத் தெளிவுபடுத்துகின்றார். இந்த உலகத்து உறவுகளுக்கு அன்பு செய்வதைவிட படைத்த இறைவனுக்கு அன்பு செய்வதே மேலானது. வேதனை, துன்பம் என்ற சுமைகளோடு என்னைப் பின்தொடரும் மக்கள் தான் என்னுடைய மக்கள் என்கிறார். இறை ஊழியத்தின் நற்பயன்களை எடுத்துக் கூறும் ஆண்டவர் இறை ஊழியத்திற்கு உதவி செய்யும் மக்களும் உண்மையிலும் உண்மையாகவே கைமாறு பெறுவர் என்று உறுதி அளிக்கின்றார்.

**எம் பேரில்**

எங்களுடைய வாழ்க்கையில் எல்லாவற்றிற்கும் மேலான அன்பை இறைவனுக்குக் கொடுக்க முடியுமா? கிறிஸ்தவ மறுமலர்ச்சி மக்களாகிய நானும் நீங்களும் இந்த உலகு உறவுகளுக்கு அடிமையாகி இருக்கின்றோமா? இயேசுவே, என் ஆண்டவர் என்று அவருக்கு முதலிடம் கொடுத்து அவரைப் பின்தொடர தாகம் கொள்வோம். அவர் அன்பும் கருணையும் நிறைந்தவர் என்பதில் விழிப்புற்று வாழ முயல்வோம்.

**செபம்**

அன்பின் இறைவா! உம்மை முழுமையாக அன்பு செய்வதற்கும் வேதனை, துன்பம் எனும் சுமைகளைச் சுமந்து கொண்டு ஆண்டவருக்குப் பின்னே செல்வதற்கு எமக்கு வல்லமையைத் தாரும் ஆமென்.

*ஆண்டவரின் பெயரே எமக்குத் துணை. விண்ணையும் மண்ணையும் உண்டாக்கியவர் அவரே!*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன் நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்**

| 2011 ஆடி 12 செவ்வாய் | | |
|---|---|---|
| வி. பயணம் | தி. பாடல் | பு. மத்தேயு |
| 2:1-15 | 69:2,13,19-20,32-33 | 11:20-24 |

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

*இயேசு வல்ல செயல்கள் பல நிகழ்த்திய நகரங்கள் மனம் மாற வில்லை. எனவே, அவர் அவற்றைக் கண்டிக்கத் தொடங்கினார். கொராசின் நகரே, ஐயோ உனக்குக் கேடு, பெத்சாய்தா நகரே, ஐயோ உனக்குக் கேடு. ஏனெனில் உங்களிடையே செய்யப்பட்ட வல்ல செயல்கள் தீர், சீதோன் நகரங்களில் செய்யப்பட்டிருந்தால் அங்குள்ள மக்கள் முன்பே சாக்கு உடை உடுத்திச் சாம்பல் பூசி மனம் மாறியிருப்பர்...... உங்களுக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்.... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியின் விழிப்புறுதல்**

அன்பின் ஆண்டவரே, உமது உள்ளாந்தரத்தை இந்நற்செய்தி வழியாக நான் அறிய எனக்கு உதவி புரிந்தருளும். பல வல்ல செயல்கள் புரிந்தும் மனம் மாறாத நகரங்களைப் பார்த்து குமுறுகிறார் இயேசு, இறை மகனாயினும் அவர் மனிதனாகவே வாழ்ந்தார். ஆயினும் அப்பாவை விட்டு ஒரு கணமும் பிரிந்தவரில்லை. அப்பாவின் அனுக்கிரகத்தினால் அவர் செயலாற்றும் போது அதன் பிரதிபலனாக அப்பா பிதாவிற்கு மகிமை வந்து சேர வேண்டுமென்பதில் அவர் மிகவும் ஆர்வத்துடனும், எதிர்பார்ப்புடனுமிருந்தார். அந்த எதிர்பார்ப்பு வீணடிக்கப்படுகையில் அவரால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர் அவ்வாறு சாபமிட்டு குமுறுவதும், மக்கள் மீது அளவிட முடியாத அன்பின் நிமித்தமே.

**எம் பேரில்**

எம்மை ஒரு கணம் திரும்பிப் பார்ப்போம். நாம் எந்தளவிற்கு இயேசுவின் வார்த்தைகளை நம்பி அதன்படி வாழ முயல்கிறோம். எமது முன்னைய நிலைக்கும் இப்போதைய நிலைக்கும் இடையில் ஏதாவது மாற்றம் இருக்கிறதா? என்னுள்ளே ஏதாவது வல்ல செயல்கள் நிகழ்ந்துள்ளதா? வெளிப்படையான புதுமைகளை மாத்திரமா நான் வல்ல செயல்களாக ஏற்றுக் கொள்கிறேன்? என்னுள்ளே செயல்படுகின்ற ஆவியானவரின் வழியாக என்னை நான் அறிந்து என் பாவங்களுக்கு விழிப்புற்று மனமுருகி ஆண்டவர் முன்னிலையில் உண்மையானவனாக தோன்றி நிற்பதே ஆண்டவர் எனக்குள்ளே செய்துள்ள வல்ல செயல் அல்லவா? அதனை நான் உணராது பழைய நிலையிலேயே நான் இருந்தால் என்னைக் குறித்தும் ஆண்டவர் மனம் நொந்து குமுறி அழ மாட்டாரா?

**செபம்**

அன்பின் ஆண்டவரே! உமது வார்த்தையின்படி வாழ்ந்து, உமது அன்பிற்குரிய விசுவாசமுள்ள மகனாக மகனாக விளங்கிட தேவையான தூய ஆவியின் வரங்களை நிறைவாகப் பொழிந்தருளுமாறு உம்மை மன்றாடுகின்றோம்.

**நாள் பூராகவும்**

*ஆண்டவர் ஏழைகளின் விண்ணப்பத்திற்கு செவிசாய்க்கின்றார். சிறைப்பட்ட தம் மக்களை அவர் புறக்கணிப்பதில்லை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன் நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்**

| | | |
|---|---|---|
| 2011 ஆடி 13 புதன் | | தூய ஹென்றி நினைவு |
| வி. பயணம் | தி.பாடல் | பு. மத்தேயு |
| 3:1-6,9-12 | 103:1-4,6-7 | 11:25-27 |

**பரி. நற்செய்தியிலிருந்து**

*அவ்வேளையில் இயேசு தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகின்றேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம், தந்தையே இதுவே உமது திருவுளம். என் தந்தை எல்லாவற்றையும் என்னிடத்தில் ஒப்படைத்திருக்கிறார். தந்தையைத் தவிர வேறு எவரும் மகனை அறியார். மகனும் அவர் யாருக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறாரோ அவருமன்றி வேறு எவரும் தந்தையை அறியார் என்று கூறினார். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியில் விழிப்புறுதல்**

அகிலத்தை மீட்கவே கிறிஸ்து அவனிக்கு வந்தார். தந்தையின் திருவுளத்திற் கேற்ப பல இடங்களுக்குச் சென்றார். தந்தையின் அன்பை சொல்லாலும் செயலாலும் வெளிப்படுத்தினார். சிலர் புரிந்துக் கொண்டாலும் பலர் புரிந்துக் கொள்ளவில்லை. மனித நிலையிலே கோபம் ஏற்பட்டது. (மத்.11:20-25) இவ்வசனங்களில் கிறிஸ்துவின் உள்ளுணர்வு வெளிப்படுகின்றது. ஆயினும் தந்தையை உற்று நோக்கும்போது அவருக்கு மறை உண்மை புலப்படுகின்றது. தந்தை யாருக்கு வெளிப்படுத்த வேண்டுமென்று விரும்புகிறாரோ, அவருமன்றி வேறு எவரும் தந்தையை அறியார். கிறிஸ்துவும் தந்தையும் இணைந்திருந்ததால் மறை இரகசியத்தை அறிய முடிந்தது.

**எம் பேரில்**

ஒரு விற்பனை கூடத்தில் குழுமியிருந்த சனங்கள் மத்தியில் அறிவித்தல் ஒன்று அறிவிக்கப்பட்டது. இங்கு கூடியிருப்போர் தங்களுக்கு விரும்பிய பொருட்களை இலவசமாக எடுத்துச் செல்லலாம். அனைவரும் முண்டியடித்துக் கொண்டு தங்களால் இயன்றளவு எவ்வளவு பொருட்களைச் சேகரிக்க முடியுமோ அவ்வளவு பொருட்களை சேகரித்துக் கொண்டிருந்தார்கள். ஒரு சிறுமியோ எதுவித கலவரமும் இல்லாமல் அவ்விற்பனைக் கூடத்தில் உரிமையாளரை அனைத்துக் கொண்டாள். உரிமையாளரை பெற்றுக் கொள்ளும் போது அனைத்து பொருட்களுமே அவளுக்கு உரிமையல்லவா? என் வாழ்வில் இக்கதையைப் போன்று இறை அப்பாவை நான் அணைத்துக் கொண்டிருப்பதால் என் வாழ்வுக்கு எது தேவையோ அனைத்தையுமே பெற்றும் கொள்கின்றேன். *எத்தனை கோடி பணமிருந்தாலும் நிம்மதி வேண்டும் வீட்டிலே* என்ற பாடலுக்கேற்ப, பல பிரச்சினைகள், நோய்கள், பொருளாதார நெருக்கடி, எதிரிகளின் தொல்லை இப்படி பல இடையூறுகள் மத்தியிலும் நான் நிம்மதியாக இருக்கின்றேன். சந்தோஷமாக கணத்துக்கு கணம் வாழ்கின்றேன். கிறிஸ்து *அன்றைக்கு தொல்லை அன்றன்றைக்குப் போதும்* என்ற வாக்கை பெலவீனமான எனக்கு வெளிப்படுத்தினார். விசுவசித்ததால் மகிழ்வுடன் வாழ்கின்றேன்.

**செபம்**

அகிலத்தை படைத்த என்னிறைவா! மீட்டு, மகிழ்வாக வாழும் இரகசியத்தை வெளிப்படுத்தினீர். கோடானு கோடி நன்றி. எந்த நிலையிலும் உம்மைவிட்டு விலகாமல் உம் கரம் பிடித்து என வாழ்நாள் முழுவதும் வாழ உமது ஜீவ அருளைத் தாரும் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன் நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்**

| 2011 ஆடி 14 வியாழன் | | தூய கமிலஸ் நினைவு |
|---|---|---|
| **வி. பயணம்** | **தி. பாடல்** | **பு. மத்தேயு** |
| 3:13-20 | 105:1,5,8-9,24-27 | 11:28-30 |

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

*மேலும் அவர் பெருஞ்சுமைச் சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும், மனத்தாழ்மையும் உடையவன். ஆகவே என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ஆம் என் நுகம் அழுத்தாது. என் சுமை எளிதாயுள்ளது என்றார் (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**முதலாம் வெளிப்பாட்டிலிருந்து**

இஸ்ரயேல் மக்களிடம் மோசேயை அனுப்பும் கடவுள், உங்கள் மூதாதையினரின் ***கடவுளாம் இருக்கிறவர் நானே*** என்பவர் உங்களிடம் என்னை அனுப்பினார் என்று சொல் என்பது வெளிப்பாடாகிறது.

**ஒளியின் விழிப்புறுதல்**

வாழ்வில் முகம் கொடுக்கும் சவால்கள், துன்பங்கள், வேதனைகள், கவலைகள் போன்ற சுமைகளையும், அமைதியற்ற மனதுடன் அங்குமிங்கும் அலைந்து மனநிம்மதியைத் தேடி அதனைக் கண்டுகொள்ள முடியாத நிலையில் சோர்வுற்று விழுந்திருக்கும் மக்களை ஆண்டவர் கரம் நீட்டி அழைக்கின்றார் மனநோய், உள் நோய், உடல் வருத்தம் சாத்தானின் அட்டகாசங்களை முறைப்படுத்திக்கொள்ள சுயமுயற்சியில் தோல்வி கண்டவர்களுக்கு அன்பையும், விடுதலையையும் பெற்றுக்கொள்ள அவரிடம் வருவதற்கான அழைப்பு.

இயேசு தரும் நுகம் அவரது அன்பு, கருணை, பாதுகாப்பு, ஜீவன் அவர் அன்போடு இவற்றைத் தருவதனால் சுமையற்றதாகவும் ஆறுதலையும் விடுதலையையும் பெற்றுத் தரும். ஏனெனில் அவர் கனிவும் மனத்தாழ்மையும் உடையவராக இருக்கின்றார். ***ஆண்டவரையும் அவரது ஆற்றலையும் தேடுங்கள். அவரது திருமுகத்தை இடையராது நாடுங்கள். அவர் செய்த வியத்தகு செயல்களை நினைவு கூருங்கள்.*** (105:5 தி.பா)

**எம் பேரில்**

இயேசு எமக்குத் தரும் அழைப்பு அன்பின் அழைப்பு. அன்றைய சமுதாயத்தில் மக்களுக்கு சுமத்தப்பட்ட பாறை கற்களைப் போலானது அல்ல. அவை பெருஞ்சுமையாக இருக்க மாட்டாது. ஏனெனில் மனித மன நிலையை இயேசு நன்கு அறிவார். வேதனைப் படும் உள்ளங்களுக்கு ஆறுதலை அளிப்பவர்; மக்களை மீட்கத் தன் உயிரைத் தியாகம் செய்தவர்; இயேசுவின் அழைப்பை ஏற்று அவருக்குக் கீழ்ப்படிந்து நாளாந்த சிலுவையுடன் தன்நலம் துறந்து அவரைப் பின் தொடரும் பொழுது எம் சுமையை அவரே ஏற்கின்றார். எம்மையும் அவர் விடுதலையாக்குகின்றார். ஆகவே, முகம் கொடுக்கும் சோதனைகளில், வேதனைகளில் இயேசுவின் அன்பைக் காண்போம். எமது விசுவாசத்தை நாம் உறுதிப்படுத்திக் கொள்வோம். பெலயீனங்களுக்கு அடிமையாகாமல் தூய ஆவியானவருக்கு விழிப்புற்று வாழ்வோம்.

**செபம்**

அன்பின் இயேசுவே! என் தவறுகளுக்காக உம் இரத்தத்தைச் சிந்தி எனக்கு மீட்பைப் பெற்றுத் தந்தீர் நன்றி இயேசுவே. உமது வாழ்வு தரும் வார்த்தைகளில் உறுதியான விசுவாசத்துடன் வாழ்ந்து உண்மைக் கிறிஸ்தவனாக வாழ தூய ஆவியினால் என்னை வழிநடத்தியருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 2011 ஆடி 15 வெள்ளி | | தூய பொனவெந்தூர் நினைவு |
| வி. பயணம் | தி.பாடல் | பு. மத்தேயு |
| 11:10-12:14 | 116:12-13,15-18 | 12:1-8 |

**பரி. நற்செய்தியிலிருந்து**

*அன்று ஓர் ஓய்வு நாள். வயல் வெளியே இயேசு சென்று கொண்டிருந்தார். பசியாயிருந்ததால் அவருடைய சீடர் கதிர்களைக் கொண்டு தின்னத் தொடங்கினர். பரிசேயர்கள் இதைப்பார்த்து இயேசுவிடம் பாரும் ஓய்வு நாளில் செய்யக் கூடாததை உம் சீடர்கள் செய்கிறார்கள். என்றார்கள். அவரோ அவர்களிடம் தாமும் தம்முடன் இருந்தவர்களும் பசியாய் இருந்தபோது தாவீது என்ன செய்தார் என்பதை நீங்கள் வாசித்தது இல்லையா? இறை இல்லத்திற்குள் சென்று அவரும் அவரோடு இருந்தவர்களும் அர்ப்பண அப்பத்தை உண்டார்கள். குருக்கள் மட்டுமே உண்ணக்கூடிய அப்பங்களை அவர்கள் உண்டது தவறல்லவா? (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியில் விழிப்புறுதல்**

ஓய்வு நாள் கடவுளால் படைப்பு வேலைகள் அனைத்தும் நிறைவு பெறச் செய்த நாள். அந்நாளுக்கு ஆசி வழங்கி அதை புனிதப்படுத்தினார். முதல் வாசகத்தில் புளிப்பற்ற அப்பவிழா. இஸ்ரயேலருக்கு விடுதலை என்றும் பசியைத் தீர்க்க ஏற்பாடு செய்யும் வழியை காண்கிறோம். இங்கு அன்பர் இயேசுவை பின்பற்றிய சீடர்களின் பசிக்காரணமாக உணவு உண்ணத் தொடங்கியதைக் காண்கிறோம். பரிசேயர் யூத சட்ட திட்டங்களை கொண்டவர்கள். ஆதலால் அவர்களைக் கண்டனம் செய்து கொள்கிறார்கள். சீடர்கள் சிறுமைப்பட்டதைப் பார்த்து இரக்கமுள்ள இயேசு பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்று அவர்களுக்காகப் பரிந்து பேசி அவர்கள் வேதனையை தணிக்கிறார்.

**எம் பேரில்**

நாம் வாழும் சமுதாயத்தில் பசி, பட்டினியோடு வாழும் மக்கள் ஒருபுறம் ஆன்ம பசியுடன் வாழும் மக்கள் இன்னொருபுறம், உணர்வு ரீதியாக பாதிக்கப்பட்ட மக்கள் ஒருபுறம் இவர்களைச் சந்திக்கும் நேரங்களில் அன்பர் இயேசுவின் மனநிலை உள்ளவர்களாய் முகம் கொடுப்பதற்கு பின்வாங்காமல் முன்வருவதற்கு தூய ஆவியின் வல்லமையைக் கேட்டுச் செயல்படுவோம். அப்போது எங்கள் துன்ப நேரங்களில் இயேசு பரிந்து பேசுவார்.

**செபம்**

*ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் அவருக்கு என்ன கைமாறு செய்வேன்*

தி. பாடல் 116:12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன் நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்**

| 2011 ஆடி 16 சனி | | தூய கார்மேல் அன்னை திருவிழா |
|---|---|---|
| வி. பயணம் 12:37-42 | தி.பாடல் 136:1,23-24,15-18 | பு. மத்தேயு 12:14-21 |

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

*பரிசேயரோ வெளியேறி இயேசுவை எப்படி ஒழிக்கலாம் என அவருக்கு எதிராகச் சூழ்ச்சி செய்தனர். இயேசு அதை அறிந்து அங்கிருந்து புறப்பட்டு சென்றார். பலர் அவருக்குப் பின் சென்றனர். அவர்களெல்லாரையும் அவர் குணமாக்கினார். தம்மைக் குறித்து வெளிப்படையாகப் பேச வேண்டாம் என அவர்களிடம் அவர் கண்டிப்பாகச் சொன்னார். இறைவாக்கினராகிய எசாயா உரைத்த பின்வரும் வாக்குகள் இவ்வாறு நிறைவேறின.. இதோ என் ஊழியர் இவர் நான் தேர்ந்து கொண்டவர். அவரே என் அன்பர், இவரால் என் நெஞ்சம் பூரிப்படைகின்றது. இவருள் என் ஆவி தங்கும்படி செய்தேன். இவர் மக்களினங்களுக்கு நீதியை அறிவிப்பார்.... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியின் விழிப்புறுதல்**

இறைமகன் எதைச் செய்தாலும் நிரந்தரமாக தூய ஆவியானவருக்கு அவரை வழிநடத்த இடமளித்து அதன்படியே செயற்பட்டார். அவரின் போதனைகளையும் புதுமைகளையும் ஓய்வு நாளில் செயற்படும் அவரின் செயற்பாடுகளைக் கண்டு அவரை ஒழித்துக் கட்டச் சூழ்ச்சி செய்யும் பரிசேயரின் நிலையைக் காணும் அவர் மறுபக்கம் அல்லலபடும், வேதனைப்படும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரைப் பின்தொடர்ந்து வருவதைக் கண்டு அனுதாபப்படுகின்றார். எல்லோரையும் குணமாக்குகின்றார். எசாயா இறைவாக்கினரின் இறைவாக்குகளுக்கு விழிப்புறும் அவர் இதோ என் ஊழியன், இவர் நான் தேர்ந்து கொண்டவர் என்னும் இறை அப்பாவின் ஒலிக்கு விழிப்புற்ற அவர் முழு மனித சமுதாயத்தையும் பாவத்தில் இருந்து மீட்டு இறை அப்பாவின் அரவணைப்பிற்குள் அழைத்து வரும் மாபெரும் தூதுப் பணிபேரில் விழிப்புறுகின்றார். ஓய்வு நாளில் கூட சட்ட திட்டங்களுக்கு அடிமைப்படாமல் அப்பா தந்தையின் அன்பில் முழுமையாக மூழ்கிய வண்ணம் அந்த அன்பினால் அவரைப் பின்செல்லும் மக்களைக் குணமாக்கி இறை அப்பாவை மகிமைப்படுத்துகின்றார்.

**எம் பேரில்**

தாயின் வயிற்றில் உருவாகு முன்பே இறை அரசிற்கான மகனாக, மகளாக தேர்ந்து எடுத்த இறை அப்பாவின் ஒலிக்கு எவ்வளவு தூரம் விழிப்புறுகின்றோம்? ***என் பின்னே வா*** என அழைப்புவிடும் இறை மகனின் அழைப்பிற்கு எவ்வளவு தூரம் பதில் அளிக்க முன் வருகின்றோம்? இதோ என் ஊழியன் இவர் நான் தேர்ந்து கொணடவர் என்னும் அழைப்பிற்கு பதிலளிக்கின்றோமா? இறை அரசிற்காக எம்மை அர்ப்பணிக்கும் தாகம் எம்முள் இருக்கின்றதா? எமது பெலவீனமான நிலைக்கு விழிப்புறுவோம். தாகம் இருந்தும் முடியாமையைக் காண்கின்றோம். நிரந்தரமாக தூய ஆவியானவருக்கு விழிப்புற்று நாம் செய்யவேண்டியது என்னவென்று எமக்கு ஆணையிடும்படி மன்றாடுவோம்.

**செபம்**

அன்பின் ஆண்டவரே! நீர் எமக்களித்த புத்திரத்தன்மையின் உரிமையுடன் உமது திருக்குமாரன் வழியாக உமது இறை அரசைக் கட்டி எழுப்ப உதவி அருளும். உமது அரசிற்காக வாழ்ந்து வழிதவறிச் செல்லும் உமது மக்களை உமது அரவணைப்பிற்குள் அழைத்து வர உமது பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் செய்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன்**
**நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்**

| 2011 ஆடி 17 ஞாயிறு | | பொ.கா.16வது ஞாயிறு | |
|---|---|---|---|
| சால.ஞானம் | தி.பாடல் | உரோம | பு. மத்தேயு |
| 12:13,16-19 | 86:5-6,9-10,15-16 | 8:26-27 | 13:24-43 |

பொதுக் காலத்தின் பதினாறாவது ஞாயிறு வாரத்தை அடைந்துள்ள நாம் இறை ஆண்டவரது அன்பு நிறை தீர்ப்பிடுதலைப் பற்றித் தியானிப்போம். அனுபவிப்போம். இறைவனது தீர்ப்பிடுதலை முன்கொண்டு மனம் வருந்துவதற்கான சந்தர்ப்பமொன்று மனிதனுக்குக் கிடைக்கப் பெறுகிறதென்று முதலாவது வெளிப்பாடு கூறுகின்றது. இறைவனது பொறுமை, இடமளித்தல், இறுதித் தீர்ப்பு என்பன பற்றியவற்றை கோதுமை, களைகள் பற்றிய உவமை வழியாக பரிசுத்த நற்செய்தி வெளிப்பாடு எடுத்தியம்புகின்றது. இறைவனது திருவுளம் பற்றி தெளிவுள்ளவரான தூய ஆவியானவர் எமது பெலவீனங்களின் போது எமக்காக வேண்டி இறைவனிடம் வேண்டுகின்றார் என இரண்டாவது வெளிப்பாடு கூறுகின்றது.

**முதலாவது வெளிப்பாட்டிலிருந்து**

...நீர் ஆற்றல் மிக்கவராய் இருப்பதால் கனிவோடு தீர்ப்பு வழங்குகிறீர். மிகுந்த பொறுமையோடு எங்களை ஆள்கிறீர். ஏனெனில் நீர் விரும்பும் போதெல்லாம் செயல்புரிய உமக்கு வலிமை உண்டு. நீதிமான்கள் மனித நேயம் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்பதை இச்செயல்கள் வாயிலாக உம் மக்களுக்குக் கற்றுக் கொடுத்தீர். உம் மக்களை நன்மையினால் நிரப்பினீர். ஏனெனில் பாவங்களிலிருந்து மனமாற்றம் அருளுகிறீர்.

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

*.....விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம். ஒருவர் தம் வயலில் நல்ல விதைகளை விதைத்தார். அவருடைய ஆள்கள் தூங்கும் போது அவருடைய பகைவன் வந்து கோதுமைகளுக்கிடையே களைகளை விதைத்து விட்டுப் போய் விட்டான். பயிர் வளர்ந்து கதிர் விட்டபோது களைகளும் காணப்பட்டன. நிலக்கிழாருடைய பணியாளர்கள் அவரிடம் வந்து ஐயா, நீர் உமது வயலில் நல்ல விதைகளை அல்லவா விதைத்தீர்? அதில் களைகள் காணப்படுவது எப்படி? என்று கேட்டார்கள். அதற்கு அவர் இது பகைவனுடைய வேலை என்றார். உடனே பணியாளர்கள் அவரிடம் நாங்கள் போய் அவற்றைப் பறித்துக் கொண்டு வரலாமா? உம் விருப்பம் என்ன? என்று கேட்டார்கள். அவர் வேண்டாம். களைகளைப் பறிக்கும் போது அவற்றோடு சேர்த்துக் கோதுமையையும் நீங்கள் பிடுங்கிவிடக் கூடும். அறுவடை வரை இரண்டையும் வளர விடுங்கள். அறுவடை நேரத்தில் அறுவடை செய்வோரிடம் முதலில் களைகளைப் பறித்துக் கொண்டு வந்து எரிப்பதற்கெனக் கட்டுகளாகக் கட்டுங்கள். கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்று கூறுவேன் என்றார்.*

**ஒளியில் விழிப்புறுதல்**

நன்மையையன்றி தீமையை இறைவன் உலகிற்கு கொண்டு வந்தாரில்லை. இது பகைவனுடைய வேலை என்று விதைத்தவர் கூறுகின்றார். ஆயினும், உலக முடிவுவரை களைகளையும், கோதுமையையும், வளர்வதற்கு அவர் இடமளிக்கின்றார். இறை தகப்பனது அதி உன்னதமான பொறுமையைப் பற்றி இறைமகன் இயேசு உவமைவாயிலாக எடுத்தியம்புகின்றார். இறைவன் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் இருந்தால் உலகில் இவ்வாறான நிகழ்வதற்கு முடியுமா? என சில பண்டிதர்கள் கேட்கின்ற கேள்விக்கு இது நல்லதொரு பதிலாகிறது. நிலக்கிழார் ஆரம்பத்திலேயே ஏன் களைகளைப் பிடுங்கி விடவில்லை? களைகளைப் பறிக்கும்போது அவற்றோடு சேர்த்து கோதுமையையும் பிடுங்கி விடக் கூடும். அதாவது பாவிகள் மனம் திருந்தியவர்களாக மீண்டும் திரும்பிவருவதற்காகக் கொடுக்கப்படுகின்ற காலம் என்றும் கருதுவது பொருத்தமானதாகும். முதலாவது வெளிப்பாடானதும் இறைவனுடைய கனிவிரக்கத்தைப் பற்றி எடுத்தியம்புகிறது.

எப்படியானால் நாம் வாழுகின்ற காலவரையறையை மனம் வருந்துதலின் காலவரையறையாக்கிக் கொள்வோம். அவரது தயவையும் பரிவையும், இரக்கத்தையும், அன்பையும் அனுபவிப்போம். எமது பெலவீனங்கள், பாவத் தன்மைகள் என்ற களைகள் பற்றியே மனம் நொந்த வண்ணமாக இராது, அவற்றை வேரோடு பிடுங்கி விடுவதற்கு அவசரப்படாமல், இறை புத்திரத்தன்மை என்ற கோதுமையை பறித்து, பயன் பெறுவதற்காகத் தாகங்கொள்வோம்.

இயேசு ஆண்டவர் பேரில் கண்களை ஏறெடுப்போம். அவர் மற்றவர்களை நல்லவர்களாக, நீதிமான்களாக்குவற்கு முயற்சி செய்யவில்லை. பாவத்தை வெறுத்ததோடு, இறைவன் பேரில் எப்போதும் கண்களை ஏறெடுப்பதற்கும் தாம் சரி என்ற நிலையிலிருந்து விடுதலை பெறுவதற்கும் மனம் வருந்துதலுக்கு விடுக்கின்ற அழைப்போடு பாவத்திலிருந்து விடுதலையடையுமாறு செய்தார். தந்தை பேரில் எப்போதும் கண்களை ஏறெடுக்கச் செய்வதே அவரது குறிக்கோளாக அமைந்திருந்தது. அவ்வாறு செய்வதே மக்கள் பாவத்திலிருந்து மீளுவதற்கான காரணமாகும் என்பது அவரது செயற்பாடுகளிலிருந்து தெளிவாகிறது.

**இரண்டாவது வெளிப்பாட்டிலிருந்து**

இவ்வாறு தூய ஆவியார் நமது வலுவற்ற நிலையில் நமக்குத் துணை நிற்கிறார். ஏனெனில் எதற்காக எப்படி நாம் இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது. தூய ஆவியார் தாமே சொல்வடிவம் பெறமுடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகிறார். உள்ளங்களைத் துருவி ஆயும் கடவுள் தூய ஆவியாரின் மன நிலையை அறிவார். தூய ஆவியாரும் கடவுளுக்கு உகந்த முறையில் இறைமக்களுக்காகப் பரிந்து பேசுகிறார்.

**ஒளியில் விழிப்புறுதல்**

இறை மகனால் எமக்குக் கிடைக்கப்பெற்ற துணையாளர் தூய ஆவியானவர் ஆவார். இறைவனிடம் வேண்டுவதற்கு நமக்குக் கற்பிப்பவரும் அவரே. எமது உள்ளரங்கத்தில் உள்ள துன்ப, வேதனைகள், முணுமுணுப்புக்கள், பெருமூச்சுக்காக அனைத்திற்காவும் வேண்டி அவர் இறைஞ்சுகின்றார். பரிந்து பேசுகின்றார். அது இறைவிருப்பத்திற்கு ஏற்ப அமைவதால் அவர் அவற்றை எமக்குப் பெற்றுத் தருகின்றார். நாம் ஆவியானவர் வாழுகின்ற ஆலயங்களாவோம்.

**செபம்**

தூய ஆவியானவரே, இடர்பாடுகள், இன்னல்கள் மத்தியிலும் இறைமகன் பேரில் நம்பிக்கை வைத்தவர்களாக பொறுமையோடு சோதனைகளை சாதனைகளாக்குவதற்கான வரத்தினை எமக்குத் தந்தருளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன்**
**நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்**

| | | |
|---|---|---|
| 2011 ஆடி 18 திங்கள் | | |
| வி. பயணம் 14:5-18 | தி.பா, வி.பய. 15:1-6 | பு. மத்தேயு 12:38-42 |

**பரி. நற்செய்தியிலிருந்து**

*அப்பொழுது மறைநூல் அறிஞர், பரிசேயர் சிலரும் இயேசுவுக்கு மறுமொழியாக, போதகரே, நீர் அடையாளம் ஒன்று காட்ட வேண்டும் என விரும்புகின்றோம் என்றனர்... யோனா மூன்று பகலும் மூன்று இரவும் ஒரு பெரிய மீனின் வயிற்றில் இருந்தார். அவ்வாறே மானிட மகனும் மூன்று பகலும், மூன்று இரவும் நிலத்தின் உள்ளே இருப்பார்... தீர்ப்பு நாளில் தென்னாட்டு அரசி இத்தலை முறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார். ஏனெனில் அவர் சாலமோனின் ஞானத்தைக் கேட்க உலகின் கடைக்கோடியிலிருந்து வந்தவர். ஆனால் இங்கிருப்பவர் சாலமோனிலும் பெரியவரல்லவா! (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியில் விழிப்புறுதல்**

எமது சற்குருநாதராம் தூய ஆவியானவரே! இன்றைய வெளிப்பாடுகளுள் மறைந்துள்ள மறையுண்மைகளைப் புரிந்து வாழ வரமருள்வீராக!

காதால் கேட்டும், கண்களால் பார்த்தும், மனம் மாறாமல் கேள்விமேல் கேள்வி எழுப்பி அரும் அடையாளங்களைக் கேட்டு நிற்கும் பரிசேயர் மறைநூல் அறிஞர்களின் உள்ளாந்தரம் எப்பேர்ப்பட்டதெனப் புரிந்து கொள்கிறார். எனவே தான் தீய விபசாரத்தலை முறையினரே என்று எச்சரிக்கின்றார். யோனா அறிவித்த செய்தியைக் கேட்க உலகின் கடைக்கோடியிலிருந்து வந்த தென்னாட்டு அரசியையும் மேற்கோள் காட்டி; யோனாவிலும் சாலமோனிலும் பெரியவரல்லவா இங்கிருப்பவர் என்று தம்முள் செயல்படுபவர் இறை தந்தையானவர் முழு உலகையும் ஆளும் மாவேந்தர் அவரே எனத் தந்தையை மகிமைப்படுத்துகிறார். அன்று பார்வோனை வென்று இறை தந்தை மாட்சியுற்றபோது நானே ஆண்டவர் என்று எகிப்தியர் உணர்ந்தது போல; மானிட மகனும் பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் உயிர்த்தெழும்போது முழு மனுக்குலமும் **இயேசுவே ஆண்டவர்** எனப் பறைசாற்றி இறைத்தந்தையை மாட்சிமைப் படுத்துவர் என்பதைக் காண்கின்றார்.

**எம் பேரில்**

இன்றைய சமுதாய வாழ்வில் ஒவ்வொரு மதமும் தத்தம் மதங்களில் விசுவாசம் வைத்து ஆராதனை செய்கின்றனர். பார்த்த பார்வைக்கு இறந்தவர்கள் இறந்தவர்களாகவே இருக்கின்றனர். ஆனால் கத்தோலிக்கராகிய நாம் ஒவ்வொருவரும் இறந்து, உயிர்த்து உயிருள்ள ஆண்டவராக நம்மோடு வாழ்ந்து கொண்டிருப்பவரையே ஆராதித்து விசுவசிக்கின்றோம். இச்சத்தியமானவரை உண்மையானவரை எந்த அளவுக்கு நம் வாழ்வில் உரிமையாக்கி முதலிடத்தை கொடுக்கின்றோம். அல்லது இன்னும் அரும் அடையா-ளங்களைத் தேடுவதிலும், கோயில் கோயிலாக மெழுகுதிரி கொழுத்து-வதிலும் பால் குடம் கொடுப்பதிலும் நேர்த்திகளிலுமாகவா வாழுகின்றோம். நாம் இருக்கின்ற நிலைக்கு விழிப்புறுவோம். இறைவார்த்தைக்கு கீழ்ப்படிந்து மனம்மாறி இறை ஆசீர்வாதங்களினால் நிறைவைக் கண்ட நினிவே நகர மக்களைப் போன்று; நாமும் மனம் மாறி இறைவார்ததையில் நம்பிக்கை வைத்து வாழ தூய ஆவியானவரிடம் வர்ம் கேட்போம்.

**செபம்**

அன்புத் தகப்பனே! உமது திருவார்த்தைகளை கேட்க மறுத்த என் செவிகளையும், ஏற்க மறுக்கும் என் உள்ளத்தையும் குணப்படுத்தி உமது பேரன்பால் என்னை வழிநடத்திச் செல்வீராக ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2011 ஆடி 19 செவ்வாய் | | |
|---|---|---|
| வி. பயணம் | தி.பா.வி.பய | பு. மத்தேயு |
| 14:21-15:1 | 15:8-10,12,17 | 12:46-50 |

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

*ஒருவன் இயேசுவை நோக்கி அதோ, உம் தாயும் சகோதரர்களும் உம்மோடு பேசவேண்டும் என்று வெளியே நின்று கொண்டிருக்கின்றார்கள் என்றார். அவர், இதைத் தம்மிடம் கூறியவரைப் பார்த்து, என் தாய் யார்? என் சகோதரர்கள் யார் என்று கேட்டார். பின் தம் சீடர் பக்கம் கையை நீட்டி என் தாயும் சகோதரர்களும் இவர்களே, விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார் என்றார். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியின் விழிப்புறுதல்**

தந்தையின் திருவுளம் நிறைவேற்றுவதே என் பொறுப்பும் கடமையும் என்ற எண்ணத்துடன் மக்களுடன் நற்செய்தியைப் பகிர்ந்த வண்ணம் இயேசு அங்கு கூடி இருந்த ஒவ்வொருவரிலும் உள்ளங்களை நன்கு அறிந்தவராக இருந்தார். அவர் தாயும் சகோதரர்களும் தன்மைச் சந்திக்க அங்கு வந்துள்ளார்கள் என்பதை இயேசு அறிந்திருந்தும் அதனைப் பொருட்படுத்த வில்லை. மக்கள் கூட்டத்திலிருந்து ஒலி வருகின்றது உம்மைச் சந்திக்க உம் தாயும் சகோதரர்களும் வெளியே வந்துள்ளனர். என்னோடு இணைந்து வாழும் என் தாயும் சகோதரர்களும் இறை சித்தம் தவறாது நிறைவேற்றுகின்றார்கள் இவர்களைப் போல மற்றவர்களும் இறைவிருப்பம் அறிந்து அதை நிறைவேற்றி நிலை வாழ்வைப் பெறவேண்டும் என்ற தாகத்துடன் விண்ணுலகில் உள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் தாயும் சகோதர சகோதரியும் ஆவார்கள் என்று கூட்டத்தினர் பக்கம் கை நீட்டி தன் தாயை கௌரவப்படுத்திய வண்ணம் கூறுகின்றார்.

**எம் பேறில்**

நான் இப்பாக்கியம் பெற்றவனா! என்னையும் இயேசு இவ்வாறு அழைக்க நான் அவர் அன்பில் நிறைந்து அவர் சித்தம் அறிந்து வாழும் நற்குணம் என்னில் உண்டா? என்னை நான் அன்பு செய்வதுபோல என் அயலவனையும் என்னால் அன்பு செய்ய முடியுமா? கடவுளின் பிள்ளையாக வாழ அவர் விருப்பம் நான் அறிய வேண்டும். அதைத் தேடி நிறைவேற்றும் தாகம் என்னில் இருக்கிறதா? இயேசுவைப் பின்தொடர அவரில் விசுவாசம் இருக்க வேண்டும். அவரை என் வாழ்வில் ஆண்டவராக ஏற்றுக்கொள்ள வேண்டும். என் தடைகளையும் முடியாத் தன்மைகளையும் காட்டும்படி தூய ஆவியிடம் கேட்போம். எனக்குள்ளிருந்து கேட்கும் இறைவனின் குரலுக்கு செவிமடுப்பதற்கு தேவையான உள்ளாழ அமைதியையும் அதைப் புரிந்துக் கொள்ளக் கூடிய ஞானத்தையும் கேட்பதுடன் அவர் வழிகாட்டலில் வாழ முயல்வோம்.

**செபம்**

இறை இயேசுவே! உம்முடைய வார்த்தையில் தங்கி வாழ்ந்து பலன் பெறுவதற்கு உம் தூய ஆவியினால் எம்மை வழிநடத்தியருளும். எப்பொழுதுமே உம் அன்பில் நிறைந்து வாழ தாகம் கொள்கிறேன். என் பெலயீனங்களில் என்னை நேர்வழிப்படுத்தும், எனது உள்ளத்தை அமைதிப்படுத்தி, உம் குரலை கேட்கவேண்டும் என்ற ஆர்வத்தையும் ஆசையையும் ஊற்றியருளும் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 2011 ஆடி 20 புதன் | | தூய அபோலினாறிஸ் நினைவு |
| வி.பயணம் | தி.பாடல் | பு. மத்தேயு |
| 16:1-5,9-15 | 78:18-19,23-28 | 13:1-9 |

**பரி. நற்செய்தியிலிருந்து**

*அதே நாளில் இயேசு வீட்டிற்கு வெளியே சென்று கடலோரத்தில் அமர்ந்தார். மக்கள் பெருந்திரளாய் அவரிடம் ஒன்று கூடி வந்தனர். ஆகவே அவர் படகில் ஏறி அமர்ந்தார். திரண்டிருந்த மக்கள் அனைவரும் கடற்கரையில் நின்று கொண்டிருந்தனர். அவர் உவமைகள் வாயிலாகப் பலவற்றைக் குறித்து அவர்களோடு பேசினார். விதைப்பவர் ஒருவர் விதைக்கச் சென்றார். அவர் விதைக்கும் பொழுது சில விதைகள் வழியோரம் விழுந்தன. பறவைகள் வந்து அவற்றை விழுங்கி விட்டன. வேறு சில விதைகள் மிகுதியாக மண் இல்லாப் பாறைப் பகுதிகளில் விழுந்தன. அங்கே மண் ஆழமாக இல்லாததால் அவை விரைவில் முளைத்தன. ஆனால் கதிரவன்..... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியில் விழிப்புறுதல்**

அன்று இஸ்ராயேல் மக்கள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டதை எண்ணாது உணவுக்காக மோயீசனையும், ஆரோனையும், வீண் வார்த்தைகளால் பேசி துக்கப்படுத்தினார்கள். இதன் வழி தோன்றலாக உலக தேவையை முன்கொண்டு இயேசுவை நாடி வந்துள்ளதை உணர்கின்றார். உலக வாழ்வைவிட மேலான வாழ்வை மக்கள் அனுபவிக்க வேண்டுமென்று கிறிஸ்து விரும்பியதால் அக்கால மக்கள் விளங்கி கொள்ளும் வகையில் உவமையின் மூலம் விளக்கி கூறுகின்றார்.

**எம் பேரில்**

வார்த்தைகளை கேட்கும்போது அதனை இரசிப்பதும் அதனை இலகுவாக வாழ்ந்துவிடலாம் என்று எண்ணுவதும் இயல்பு. நிகழ்ச்சிகள் வரும்போது தான் நாமிருக்கும் நிலை எமக்கு புரியும். விண்ணரசின் மறைபொருளை அறிய தூய ஆவியின் உதவியை நாடுவோம். இறைவார்த்தைக்கு நான் எவ்வளவு தூரம் இடமளிக்கின்றேன். என் வாழ்வில் மனமாற்றம் அவசியம். பழையன நான் மறக்க வேண்டும். என் உள்ளம் இறைவன் வாழும் ஆலயம். அது தூய்மையான இடம். என்பெலயீனங்களில் இறை அன்பை அருட்சாதனமாக்கிக் கொண்டு இறைவார்த்தையில் உறுதி விசுவாசத்துடன் வாழ முன்வருவோம். உயிர்த்த ஆண்டவர் எம்மோடு இருக்கின்றார். என்னையும் அவர் மீட்டுள்ளார். இனி நான் ஏன் தயங்கவேண்டும். விசுவாசத்துடன் அவரைப் பின்தொடர்ந்து செல்வோம். என் வாழ்க்கைத் தேவைகளில் சுயநலத்துடன் வாழாமல் இறை சித்தத்திற்கு இடமளிப்போம். வாழ்வு தரும் உணவு நானே என்கின்றார் இயேசு. அவ்வுணவை உண்டு ஆன்மீகத் தாகத்தை நிறைவு செய்து கொள்வோம்.

**செபம்**

எமக்காக உம் வாழ்வை தந்த தெய்வமே! உம்முன்னிலையிலே நிற்பதற்கும் தகுதியற்ற என்னை பெயர்சொல்லி அழைத்து உம் வார்த்தையின்படி வாழ உமது தூய ஆவியின் வல்லமையைத் தந்து வழிநடத்தும் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன் நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்**

| 2011 ஆடி 21 வியாழன் | பு.பிரிந்திசி லோரன்ஸ் மறைவல்லுனர், பணியாளர் | |
|---|---|---|
| வி. பயணம் | தானியேல் (இ) | பு. மத்தேயு |
| 19:1-2,9-11,16-20 | 1:29-33 | 13:10-17 |

**புனிதரின் வாழ்க்கை....**

இவர் இறைவனிடமிருந்து கிடைத்த கொடையாகிய நுண்ணறிவாலும் வலுவான நினைவாற்றலாலும், எண்மொழிகளைக் கற்றறிந்து அதன் வாயிலாக அனைவரதும் தவறான நோக்குகள், கருத்துக்களினின்று அவர்களை விடுவித்தார். உடல் நிலை சீரிய நிலையில் இல்லாதபோதும், ஊக்கம் தளராமல் தம் பணியினை நிறைவேற்றினார். இவர் இறக்கும்பொழுதே மன்னர்களிடையே அமைதியை ஏற்படுத்திய புனிதர் எனும் புகழோடு இறைவனடி சேர்ந்தார்.

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

சீடர்கள் அவரருகே வந்து ஏன் அவர்களுடன் உவமை வாயிலாகப் பேசுகிறீர்? என்று கேட்டார்கள். அதற்கு இயேசு, ....விண்ணரசின் மறைபொருளை அறிய உங்களுக்கு கொடுத்து வைத்திருக்கின்றது. அவர்களுக்கோ கொடுத்து வைக்கவில்லை. உள்ளவருக்குக் கொடுக்கப்படும். இல்லாதவரிடமிருந்து உள்ளதும் எடுக்கப்படும். அவர்கள் கண்டும் காண்பதில்லை. கேட்டும் கேட்பதில்லை. புரிந்து கொள்வதுமில்லை. இதனால் தான் நான் அவர்களோடு உவமை வாயிலாகப் பேசுகின்றேன்.... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)

**ஒளியின் விழிப்புறுதல்**

தூய ஆவியானவரே! வார்த்தையினை வாழ்விக்கும் ஆற்றலினை எமக்கருளியருளும்.

இந்த நற்செய்தியின் முன்னிலையில் இயேசு ஆண்டவர் முன் தோன்றி நின்றேன். அவரது உள்ளத்தில் மகிழ்ச்சியும் வேதனையும் எழும் சுபாவத்தினைக் காண முடியுமாக இருந்தது. கண்ணால் காணாமல், காதால் கேளாமல், உள்ளத்தால் உணராமல் மனம் மாறாமலும் இருக்கின்றார்கள். நானும் அவர்களைக் குணமாக்காமலும் இருக்கின்றேன். இங்கே வேதனையின் சுபாவமும் உங்கள் கண்களோ பேறுபெற்றவை. ஏனெனில் அவை காண்கின்றன. உங்கள் காதுகளோ பேறுபெற்றவை. ஏனெனில் அவை கேட்கின்றன. இங்கே மகிழ்ச்சியின் சுபாவமும் தென்படுவதை உணர்ந்தேன். என் செயல்களின் போது ஆண்டவரின் சுபாவம் எப்படியாக இருக்கும் எனச் சிந்திக்கத் தோன்றிற்று.

**எம்பேரில்**

இக்காலத்தில் ஆண்டவரின் வார்த்தை எனும் விதை என்னுள் விழுகின்ற போது அதை நான் ஏற்று கொள்கின்ற விதம் தான் என்ன? மனம் திரும்புதல் எனும் கடந்து செல்லுதல் வழி ஆண்டவரை மகிழ்விக்கின்றேனா? ஆண்டவர் என்னுள் ஆற்றும் புதுமைகளைக் காண்கின்றேனா? அகிலத்தின் வழியாக ஒலிக்கும் ஆண்டவரின் குரலொலி எனக்குள் கேட்கின்றதா?

அன்றாடம் எனது மணித்தியாலத்தின் வழி என் நிலையைக் காண ஆண்டவர் எனக்கு ஒளியைத் தந்தார். செவிப்புலனைத் திறந்தார். இறைவனுக்கே நன்றி

*ஆவலுடன் நான் ஆண்டவருக்காகக் காத்திருந்தேன். அவரும் என்னைக் கனிவோடு கண்ணோக்கினார். நாளும் இறைபுகழ் பாடிடவே நாவில் வைத்தார் புதுப்பாடல்...*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன் நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்**

| | | |
|---|---|---|
| **2011 ஆடி 22 வெள்ளி** | | தூய மகதல மரியா நினைவு |
| **2கொரிந் 5:14-17** | **தி.பாடல் 63:2-6,8-9** | **பு. யோவான் 20:1,11-18** |

**பரி. நற்செய்தியிலிருந்து**

*வாரத்தின் முதல் நாள் விடியற்காலையில் இருட்டாயிருக்கும் போதே மதலேன் மரியாள் கல்லறைக்கு வந்தாள். கல்லறை வாயிலில் கல் எடுபட்டிருந்ததைக் கண்டாள்..... அவள், என் ஆண்டவரை எடுத்துக் கொண்டு போய் விட்டனர். எங்கு வைத்தனரோ தெரியவில்லை என்றாள்... அம்மா ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்? என்று கேட்டார். அவளோ அவரைத் தோட்டக்காரன் என எண்ணி அவரிடம் ஐயா, நீர் அவரைத் தூக்கிக் கொண்டு போயிருந்தால் எங்கு வைத்தீர்? சொல்லும் நான் அவரை எடுத்துச் செல்வேன் என்றாள். இயேசு அவளை நோக்கி மரியே என்றார். அவள் திரும்பிப் பார்த்து ராபூனி என்றாள்... மதலேன் மரியாள் சீடரிடம் வந்து ஆண்டவரைக் கண்டேன். அவர் எனக்கு இப்படிச் சொன்னார் என்று அறிவித்தாள். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியில் விழிப்புறுதல்**

திருமுழுக்கு யோவானின் கையினால் திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்து இயேசுவை உமது வல்லமையினால் முழுமையாக நிரப்பி உலகிற்கு வருகை தந்த நோக்கத்தை அப்பா தந்தையுடன் பேசி அறிந்து கொள்வதற்காகப் பாலைவனத்திற்கு அழைத்துச் சென்ற ஒளியானவரே!

மேற்கூறப்பட்ட நற்செய்தி வெளிப்பாடுகள் வழியாக திருமகன் இயேசுவின் உள்ளாந்தரத்தை அறிந்து கொள்வதற்கு பாவியான என்னை தகுதியுள்ளவனாக்கும்படி தாழ்பணிகின்றேன். கல்வாரி மலை நோக்கிப் பாடுகளின் பாதையிலே தேவ மகன் ஊர்வலம்செய்த போதும் கூட தனது பணிவான உன்னதமான கீழ்ப்படிதலால் அப்பாவுக்குப் புகழ் பாடி-யிருப்பார். தந்தையின் திருத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்த திருமகனுக்கு அன்புத் தந்தையின் பரிசு உயிர்ப்பு, மரணம் தோல்வியடைகின்றது. பூவுலகே வியப்பால் அதிர்கின்றது. சீடர்களோடு வாழும்போது கிறிஸ்து இயேசு இதைப் பற்றிக் கூறினாலும் அவர்களால் அதை உணர்ந்து கொள்ள முடியவில்லை. எனவே தான் உயிர்த்த தேவனை கல்லறையில் தேடினார்கள். காணவில்லை கண்ணீர் சிந்திக் கதறினார்கள்.

**எம் பேரில்**

ஆம் இன்று நாமும் நம்மிடையே வாழும் உயிர்த்த தேவனை எங்கெல்லாமோ தேடிச் சோர்வடைகின்றோம். விசுவாசமற்ற நிலையில் நமது வார்த்தைகளுக்குள் மாத்திரம் விசுவாசத்தை எல்லைப்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் செயல்படுத்த மறக்கின்றோம். ஏனிந்த அவல நிலை? தூய ஆவியானவரே நாங்கள் செய்ய வேண்டியது என்ன என்பதை ஆணையிட்டுக் கூறியருளும் என்று ஏன் ஆணித்தரமாகக் கூறமுடியாது? ஆம் உலகம், சரீரம், அசுத்த ஆவி என்னும் சத்துராதிகளின் சவாலை ஏற்று முகங்கொடுக்க முடியாமல் திணறுகின்றோம். நம்மைப் பலப்படுத்தும் உத்தானமான கிறிஸ்துவில் எல்லாமே செயல்படுத்த முடியும். எனவே அவரிடம் வற்றாத அவரது வல்லமையை இரந்து கேட்போம்.

**செபம்**

அன்பின் இறைவா! உமது பரிசுத்த தனத்தின் முன்னே சகதியில் தெளியும் புழுவிலும் கேவலமான எமது ஈனப்பாவங்களை மன்னித்து எமது தண்டனைகளைத் தணிக்கும்படி தாழ்பணிந்து நிற்கின்றோம். இவை யாவும் எங்கள் ஆண்டவர் இயேசுவின் பெயராலே ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2011 ஆடி 23 சனி | | |
|---|---|---|
| வி. பயணம் | தி.பா.வி.பய | பு. மத்தேயு |
| 24:3-8 | 50:1-2,5-6,14-15 | 13:24-30 |

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

*இயேசு அவர்களுக்கு எடுத்துரைத்த வேறு ஒரு உவமை. விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம். ஒருவர் தம் வயலில் நல்ல விதைகளை விதைத்தார். அவருடைய ஆள்கள் தூங்கும்போது அவருடைய பகைவன் வந்து கோதுமைகளுக்கிடையே களைகளை விதைத்து விட்டுப் போய்விட்டான். பயிர்வளர்ந்து கதிர் விட்டபோது, களைகளும் காணப்பட்டன..... அறுவடைவரை இரண்டையும் வளரவிடுங்கள். அறுவடை நேரத்தில் அறுவடை செய்வோரிடம் முதலில் களைகளைப் பறித்துக்கொண்டு வந்து எரிப்பதற்கெனக் கட்டுகளாகக் கட்டுங்கள். கோதுமையையோ என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்று கூறுவேன் என்றார் (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியின் விழிப்புறுதல்**

ஆருயிர் நண்பராம் தூய ஆவியானவரே இன்றைய தினம் இயேசு எமக்கு எடுத்துக் கூறும் உவமையை விளங்கிக் கொள்ள எம்மையும் வழிநடத்தும்.

முழுமையாகத் தூய ஆவியானவரின் வழிநடத்தலுக்கு உள்ளாகி இருந்த இயேசு விண்ணரசின் மறை இரகசியத்தைப் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கும் தமது சீடர்களுக்கும் மக்களுக்கும் உவமைகள் மூலம் போதிக்க முன்வந்தார். இவ்வுலக மாய வயலில் நல்ல விதைகளை விதைப்பவர் அவரேதான் என எடுத்துக்காட்டுவதுடன் களைகளை விதைப்பவன் சாத்தான் என்பதையும் மறைவாகக் காட்டுகின்றார். ஆண்டவரின் ஆட்சிக்குட்பட்டவர்கள் நல்ல விதைகளாகவும் களைகள் தீயோனின் மக்கள் எனவும் எடுத்துக் காட்டுகின்றார். அவரின் வார்த்தையைக் கேட்டு வாழ்பவர்கள் கடவுளின் மக்களாகவும் அதைக் கேளாமல் உலக ஆசைகளுக்கு அடிமைப்பட்டு அவரின் வார்த்தைகளைப் புறக்கணித்து தூங்குவோர் தீயோனின் மக்கள் என விளக்கிக் காட்டுகின்றார். கடைசி தீர்வு நாளில் அறுவடை செய்யும் வானதூதர் உலக முடிவிலும் அவரின் ஆட்சிக்குத் தடையாக, நெறிகெட்டு வாழுவோர் முகம் கொடுக்கப்போகும் நிலையை எடுத்துக்காட்டுவதுடன் நல்ல விதைகளாகிய ஆண்டவரின் மக்கள் தம் தந்தையின் ஆட்சியில் கதிரவன் போல் ஒளிவீசுவார் என கூறி, இன்று எம்மையும் விழிப்பூட்டுகின்றார்.

**எமது பேரில்**

நாம் இருக்கும் நிலைக்கு விழிப்புறுவோம். நாம் எமது வாழ்க்கையில் கடவுளின் ஆட்சிக்கு உட்பட்ட நல்ல விதைகளாகவா வாழ்கின்றோம்? உலக ஆசைகளுக்கும் பொறாமை, வைராக்கியம், குரோதம் போன்றவற்றுக்கு அடிமைப்பட்டு எமது வாழ்க்கையை தீயோனுக்கு வழிநடத்த இடமளித்து தூங்கிக் கொண்டா இருக்கின்றோம். கடைசித் தீர்ப்பன்று எமக்கு கிடைக்கப்போகும் தீர்ப்புக்கு விழிப்புற்று இயேசுவின் வார்த்தைகளை எமது உணவாக்கி நிரந்தரமாக எம்முள் வீற்றிருக்கும் தூய ஆவியானவருக்கு எம்மை வழிநடத்த இடமளித்து தந்தையின் ஆட்சியில் கதிரவனாக ஒளி வீசத் தாகத்தை ஏற்படுத்திக் கொள்வோம்.

**செபம்**

தூய ஆவியானவரே, நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன். இயேசு ஆண்டவர் விதைக்கும் விதைகளுக்கமைய வாழ்ந்து கடவுளின் ஆட்சிக்கு உட்பட்ட மக்களாக வாழ நான் என்ன செய்ய வேண்டுமென்று எனக்கு ஆணையிட்டருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 2011 ஆடி 24 ஞாயிறு | | | பொ.கா.17வது ஞாயிறு |
|---|---|---|---|
| 1அரசர் | தி.பாடல் | உரோமர் | பு. மத்தேயு |
| 3:5,7-12 | 119:57,72,76-77,127-130 | 8:28-30 | 13:44-52 |

விண்ணரசைப் பற்றி நம ஆண்டவர் இயேசுவின் இதயத்துள் இருந்த நோக்கானது, சவால் மிக்கதாகும். நிலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த புதையலைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டி, தமக்குள்ள யாவற்றையும் விற்றவரைப் போலாக வேண்டியதோடு, அதற்கு எதிராக உலகோரிடமிருந்து வருகின்ற எதிர்ப்பை இனம் காணுகின்றவர்களாக வேண்டும். இறைவிருப்பத்-தினை நிறைவேற்ற வேண்டும் என்பதே இன்றைய தலைப்பாகியுள்ளது. அதற்காக வேண்டி எமக்குப் பலவற்றைக் கைவிட வேண்டி வரும். கண்ணுக்குப் புலனாகாத பேரில் எம்மால் நம்பிக்கை கொள்வதற்கு முடியுமாகும். ஆயினும் கண்ணுக்குப் புலனாகாதன வாயிலாக வருகின்ற இறையொலிக்குச் செவிமடுத்தவாறு, அதற்கு எமது பிரதிச் செயலைக் காண்பிப்போமாக!

**முதலாவது வெளிப்பாட்டிலிருந்து**

....உம் மக்களுக்கு நீதி வழங்கவும், நன்மை தீமை பகுத்தறியவும் தேவையான ஞானம் நிறைந்த உள்ளத்தை அடியேனுக்குத் தந்தருளும்... சாலமோன் இவ்வாறு கேட்டது ஆண்டவருக்கு உலகத்தால் இருந்தது... இதோ! நான் இப்பொழுது நீ கேட்டபடியே செய்கிறேன். உனக்கு நிகராக, உனக்கு முன்னதே எவரும் இருந்ததில்லை. உனக்குப் பின்னே இருக்கப் போவதுமில்லை. அந்த அளவுக்கு ஞானமும், பகுத்தறிவும் நிறைந்த உள்ளத்தை உனக்கு வழங்குகிறேன்.

**இறைமகன் இயேசுவின் பேரில்**

தமது தேசத்து மக்களுக்கு நீதி வழங்கவும், நன்மை தீமை பகுத்தறியவும் தேவையான ஞானத்தை சாலமோன் அரசன் இறைவனிடம் இரைஞ்சுகின்றார். ஆண்டவரும் அரசன் பேரில் உவப்படைகின்றார். புதிய உடன்பாட்டில் நம் ஆண்டவ-ராகிய இயேசு கிறிஸ்துநாதரும், தந்தையின் திருவுளத்தை இனங்-கண்டவாறு, அதற்கேற்ப மக்களை வழிநடத்துவதற்காக வேண்டி தந்தை-யிலே தங்கி வாழ்ந்தார். அவரது ஒப்புயர்வற்ற வாழ்க்கைப் பலியானது, இறைமக்களை தந்தையுடன் ஒன்றி-ணைக்கின்ற மாபெரும் பலியாகியது.

சாலமோன் அரசன் பல பெலயீனங்களுக்கு ஆளாகிய போதிலும் இறை வழிகாட்டுதலை எப்போதும் வேண்டினார். நன்மை தீமையைப் பகுத்தறியும் ஞானத்தை அவருக்கு அளித்த போதிலும் நம் ஆண்டவர் இயேசு அனைத்தும் பற்றிய எல்லா வழிகாட்டுதல்களையும் அளவையும் இறை மக்களிடமிருந்தே பெற்றுக் கொண்டார்.

இறை தந்தையைக் காணும்படி செய்கின்ற சத்தியத்தின் பேரில் உளந்திறந்தவாறு இறையுள்ளத்தை வெளிப்பாடாக்குவதற்காக வேண்டி, இறைமகன் செயற்பட்ட விதமானது, உண்மையாகவே தந்தையை மகி-மைப்படுத்துவதற்கான காரணமாகியது.

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

ஒருவர் நிலத்தில் மறைந்திருந்த புதையல் ஒன்றைக் கண்டு பிடிக்கிறார். அவர் அதை மூடி மறைத்துவிட்டு மகிழ்ச்சியுடன் போய்த் தமக்குள்ள யாவற்றையம் விற்று அந்த நிலத்தை வாங்கிக் கொள்கிறார். விண்ணரசு இப்புதையலுக்கு ஒப்பாகும்.. ஆகையால் விண்ணரசு பற்றிக் கற்றுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட எல்லா மறைநூல் அறிஞ-ரும் தம் கருவூலத்திலிருந்து புதிய வற்றையும் பழையவற்றையும் வெளிக் கொணரும் வீட்டு உரிமையாளரைப் போல் இருக்கின்றனர் என்று அவர்களிடம் கூறினார்.

**இறைமகன் பேரில்**

விண்ணரசினைப் பற்றி நம் ஆண்டவராம் இறைமகனுக்குள் புதை-யுண்டிருந்த நோக்குகளை, அன்றாடம் மக்கள் பாவனைக் கெடுப்பவற்றை உதவியாகக் கொண்டு விளக்குகிறார். அரசின் பெறுமதி, இறை ஞானத்-திற்கமைய அதனைத் தேடிச் செல்-வோருக்கு அனைத்தையும் அர்ப்ப-ணமாக்கி விட்டு, அரசினை உரிமை-யாக்கிக் கொள்ளுகின்ற வரப்பிரசாதம் கிடைக்குமென்பதும் நிறைவுறுத்தப்-படுகின்றது.

இயேசு ஆண்டவர் மனதினால் மாத்திரமின்றி இதயத்தாலும் அனுபவத்தினாலும் விண்ணரசை உரிமையாக்கிக் கொண்டிருந்ததோடு, அதன் பெறுமதியை அறிந்து அதன் உரிமையைப் பெறுவதற்கான தாகமு-டையோருக்கும் அழைப்பு விடுக்கின்-றார். உலகைச் சாராது அரசினை உரிமையாக்கிக் கொள்ளுகின்ற மறை நூல் அறிஞரைப் பற்றியும் கதைக்-கின்றார். நீதி நெறிகளைத் தவறாது கைக்கொள்ளுகின்ற நிறைவேற்றுகின்ற அன்பினை அறியாத அவர்கள் அரசின் பெறுமதியால் அலங்கரித்துக் கொள்-ளும்போது புதியவற்றையும் பெலயீ-னங்களுக்கான பெறுமதியையும் பெற்-றுக் கொள்ளுகிறதுண்டு. ஏனெனில், உலக பெறுமதியான அனைத்தையும் அரசினைக் குறிக்கோளாக்கிக் கொண்டு உட்புகுகின்றபடியாலாகும்.

ஆனபடியால் இறை இயேசுவுடன் இணைந்தவர்களாக விண்ணரசு எம்மிடையே உள்ளது என்பதைக் காண்பதற்கும் அனைத்-தையும் அதனைத் தேடிச் செல்வற்கும் எமக்கு உரியனவெனக் கருதும் எல்லாவற்றையும் அர்ப்பணமாக்கிவிட்டு, அதனை உரிமையாக்கிக் கொள்வதற்கான வல்லமையை வேண்டுவோம்.

**இரண்டாவது வெளிப்பாட்டிலிருந்து**

மேலும் கடவுளிடம் அன்பு கூர்பவர்களோடு, அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்-களோடு, அவர்கள் நன்மைக்காகவே ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்-கின்றார் என்பது நமக்குத் தெரியும். தம்மால் முன்பே தேர்ந்து கொள்ளப்-பட்டவர்களை தம் மகனின் சாயலுக்-கேற்றவாறு இருக்க வேண்டுமெனக் கடவுள் முன்குறித்து வைத்தார்... தாம் முன்குறித்து வைத்தோரை அவர் அழைத்திருக்கிறார். தாம் அழைத்-தோரைத் தமக்கு ஏற்புடையோராக்கி இருக்கிறார். தமக்கு ஏற்புடையோரா-னோரைத் தம் மாட்சியில் பங்கு பெறச் செய்தார்.

**இறை மகன் பேரில்**

தாம் முன்குறித்து வைத்தோரை அவர் அழைத்திருக்கிறார். அவர்கள் யார்? கடவுளிடம் அன்பு கூர்பவர்கள் யார்? அவர்களுக்காக வேண்டி இயேசுகிறிஸ்து நாதர் முன்வருகின்றார். தந்தைக்கும், மகனுக்கும் இடையிலான ஆழமான அன்பின் பரிமாறுதல் காரணமாகவே மகன் தந்தையின் விருப்பத்திற்கமையச் செயற்படுகின்றார்.

**செபம்.**

அன்பின் ஆவியானவரே, இறைமகன் இயேசுவுடன் ஆழமான தொடர்புடையவர்களாக வாழவும், அவரது அரசின் பெறுமதிகளுக்கேற்ப வாழ்வதற்குமான வரத்தினைத் தந்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன்**
**நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்**

| | | | |
|---|---|---|---|
| 2011 ஆடி 25 திங்கள் | | திருத் தூதர் தூய யாக்கோபு விழா | |
| 2கொரிந் 4:7-15 | தி.பாடல் 126:1-6 | பு. மத்தேயு 20:20-28 | |

**முதலாம் வெளிப்பாடு**

*இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை. குழப்பமுற்றாலும் நம்பிக்கை இழப்பதில்லை. துன்புறுத்தப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை. வீழ்த்தப்பட்டாலும் அதிர்ந்து போவதில்லை. இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படும்மாறு நாங்கள் எங்கு சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கிறோம்.(நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியில் விழிப்புறுதல்**

இன்று புனித யாகப்பரின் நினைவு தினமாகும். யோவானும் யாகப்பரும் சகோதரர் செபதே-யுவின் மக்களுமாவர். இறை-வனின் மகனே இயேசு ஆண்ட-வரின் மகிமையில் பங்குபெற விருப்பம் கொண்டவராக இருந்-தவர். இறை தந்தையில் திரு-வுளத்திற்கு உங்கள் வாழ்வை கையளியுங்கள் என்று கிறிஸ்து ஆண்டவரின் வார்த்தைகளுக்கு சிலர் முழுமையாக அடி-பணிந்தார். இவர் கிறிஸ்துவின் சாட்சியாக இரத்தம் சிந்தி இறைவனின் அரவணைப்புக்கு உள்ளானவர்.

**எம் பேரில்**

இறை மகனான இயேசு கிறிஸ்து தொண்டு ஆற்றுவதற்கே இவ்வுலகிற்கு வந்தார். முதன்மையானவராக இருக்க விரும்புகின்றவன் உங்கள்பணியாளராக இருக்கட்டும் என்று கூறுகின்றார். இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நீங்கள் எங்குச் சென்றாலும் அவருடைய சாவுக்குரிய துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கிறோம் என்று கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் கூறப்படுகிறது. உயிர்த்த ஆண்டவரின் மகிமை, வல்லமை எம் வார்த்தையினூடாக செயல்பட வேண்டும். சூறாவளி போன்ற சோதனைகள் வாழ்வில் வந்து சுழற்றி அடித்தாலும் மனம் தளராது உயிர்த்த ஆண்டவரில் சரணடைவோம். கணத்துக்குக் கணம் தூய ஆவியின் விழிப்புற்று கலங்கிடாமல்செல்வோம். கடவுளே எங்களைக் காத்திடுவார்.

எமது பெலயீனங்களிலும் முடியாத்தன்மைகளிலும் உம் அன்பில் நிரம்பி வாழ துணையாக வாரும். எமக்கு ஆணையிட்டருளும். என் நாளாந்தா வாழ்வில் இயேசுவுக்குச் சான்று பகிர தாகத்தைத் தந்தருளும்.

**செபம்**

அன்பின் இறைவா! எம்மால் நாள் முழுவதும் உம்மையே எம் வாழ்வில் முதன்மையாக கொண்டு வாழ்வதற்கு தூய ஆவியின் வல்லமையைத் தந்து வழிநடத்தியருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**2011 ஆடி 26 செவ்வாய்**

வி. பயணம் 33:7-1134:5-9,28 தி.பா. 103:6-13 பு.மத்தேயு 13:36-43
அல்லது சீராக் ஞா 44:1-10,15, தி.பா 132:11-14,17-18 பு.மத் 13:16-17

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

*உங்கள் கண்களோ பேறுபெற்றவை. ஏனெனில் அவை காண்கின்றன. உங்கள் காதுகளும் பேறுபெற்றவை. ஏனெனில் அவை கேட்கின்றன. உறுதியாக நான் உங்களுக்குச் சொல்கிறேன்; பல இறைவாக்கினர்களும், நேர்மையாளர்களும் நீங்கள் காண்பவற்றைக் காண ஆவல்கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் காணவில்லை. நீங்கள் கேட்பவற்றைக் கேட்க விரும்பினார்கள் ஆனால் அவர்கள் கேட்கவில்லை. (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியின் விழிப்புறுதல்**

பூவுலகெங்கும் அசைவாடும் தூய ஆவியானவரே! என்னோடு எனக்குள் வாழ்பவரே! பெலயீனரான எனக்கு எமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உள்ளாந்திரத்தைக் காண்பித்தருளும்.

பரிசுத்த ஆவியினால் நிரம்பி இருந்த இயேசு கிறிஸ்து அனைத்து மக்களுடைய உள்ளங்களைக் காண்கின்றார். யார் யார் எப்படிப்பட்டவர், யார் எப்படி வாழ்கின்றார்கள் என்பதனை நன்கு அறிந்திருந்தார். எனவே ஆண்டவரை அறிந்து அவரோடு வாழும் மக்களுக்கு உங்கள் கண்களோ பேறுபெற்றவை என்று வாழ்த்துகின்றார். ஏனென்றால் பரிசுத்த ஆவியானவருக்கு விழிப்புற்று வாழும் மக்கள் ஆண்டவரைக் காண்கின்றனர். அவர் வார்த்தைகளைக் கேட்கின்றனர். ஆயினும் தூய ஆவியானவர்க்கு இடம் அளித்து வாழாத பொழுது அவர்களுக்கு கண்ணிருந்தும் தெரிவதில்லை. காது இருந்தும் கேட்பதில்லை என்று உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன்

**எமது பேரில்**

கிறிஸ்தவ மறுமலர்ச்சி மக்களாகிய நானும் நீங்களும் தூய ஆவியானவருக்கு நிரந்தரமும் விழிப்புற்று வாழ்கின்றோமா? எமது கண்கள் காண்கின்றனவா? எமது காதுகள் கேட்கின்றனவா? பரிசுத்த ஆவியானவரோடு இணைந்து உலகத்தில் வாழ்ந்தாலும் உலகுக்குச் சொந்தமில்லை என்ற வார்த்தைக்கு அமைய பேறுபெற்ற மக்களாகுவோம்.

இறைவனின் மறை இரகசியத்தை எம்மால் புரிந்து கொள்ள முடியாது. அவர் எம்மைத் தெரிவு செய்து எடுத்துள்ளார். அவர் அன்பால் நிரப்புகின்றார். வல்லமையைத் தருகின்றார். நாம் அவர் அன்பில் வாழும் விசுவாச மக்களா? எம்மையே நாம் திரும்பிப் பார்ப்போம்.

**செபம்**

இரக்கத்தின் ஊற்றாகிய ஆண்டவரே! உமது அன்புக்குள் வாழ்ந்து, பேறுபெற்ற மக்களாக வாழ வரம் தாரும்

*ஆண்டவர் இரக்கமும் அருளும் கொண்டவர். நீடிய பொறுமையும் பேரன்பும் உள்ளவர்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன்**
**நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்**

| 2011 ஆடி 27 புதன் | | |
|---|---|---|
| வி.பயணம் | தி.பாடல் | பு. மத்தேயு |
| 34:29-35 | 99:5-7,9 | 13:44-46 |

**பரி. நற்செய்தியிலிருந்து**

*ஒருவர் நிலத்தில் மறைந்திருந்த புதையல் ஒன்றைக் கண்டு பிடிக்கிறார். அவர் அதை மூடி மறைத்துவிட்டு மகிழ்ச்சியுடன் போய் தமக்குள்ள யாவற்றையும் விற்று, அந்த நிலத்தை வாங்கிக் கொள்கிறார். விண்ணரசு இப்புதையலுக்கு ஒப்பாகும். வணிகர் ஒருவர் நல் முத்துக்களைத் தேடிச்செல்கிறார். விலை உயர்ந்த ஒரு முத்தைக் கண்டவுடன் அவர் போய்த் தமக்குள்ள யாவற்றையும விற்று அதை வாங்கிக் கொள்கிறார். விண்ணரசு அந்நிகழ்ச்சிக்கு ஒப்பாகும்.*

*(நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியில் விழிப்புறுதல்**

ஆண்டவரே! இன்றைய வெளிப்பாட்டின் ஆழத்தை அறிய எனக்கு உதவி புரிந்தருளும்.

விண்ணரசை புதையலுக்கும், விலை உயர்ந்த முத்துக்கும் ஒப்பிட்டிருக்கிறார் இயேசு. அதாவது சுலபமாக கிடைத்தற்கரிய ஒரு பொருள் ஆண்டவரது அரசில் நாம் அடியெடுத்து வைப்பதென்பது அரிதான மிகக் கஷ்டமான ஒரு காரியமாகும். விண்ணரசிற்குள் நுழைவதற்கு எம்மை நாம் பரிபூரணமாக ஆயத்தம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். பழைய தன்மையை விட்டு விலகி புதியதொரு படைப்பாக மாறினாலொழிய விண்ணகவாழ்வினை எம்மால் பெற்றுக்கொள்ள முடியாது. மேலும் இறை வார்த்தை எனும் புதையலை நாம் உரிமையாக்கிக் கொண்டா-லொழிய விண்ணரசின் இரகசியத்தை எம்மால் அறிய முடியாது. அதன் மறை இரகசியத்தை அறிய அறிய நாம் அனைத்தையும் விற்று விட்டு புதையலுள்ள நிலத்தை உரிமையாக்கிக் கொள்பவர்களாகவோ உயரிய முத்தை வாங்கிக் கொள்பவர்களாகவோ மாறுவது உறுதி.

**எம் பேரில்**

நாம் எவ்வாறானவர்கள்? விலை மதிக்க முடியாத புதையல் நிலத்தை வாங்கிக் கொள்ளும் ஆவலுள்ளவர்களா? அல்லது நிலத்தை வாங்கியும் அதனை தோண்டிப் பார்த்து என்ன இருக்கிறது என்பதை அறிய ஆவலின்றி சோம்பேறியாக இருப்ப-வர்களா? உதாரணத்திற்கு விலை யுயர்ந்த முத்தாக, புதையலாக பரி. வேதாகமம் எமது கரங்களுக்குக் கிடைத்தும் அதனை அலட்சியப்படுத்தி அக்கறை காட்டாமல் வாழும் மக்களா நாம்? அதில் அடங்கியுள்ளவற்றாத ஊற்றாகிய இறை அன்பை நாம் எந்த அளவிற்கு அள்ளிப் பருகி இருக்கிறோம்? அழகான முத்தாக அணிந்து அனுபவித்திருக்கிறோம்? கொலை, கொள்ளை, தவறான நடத்தைகள் போன்றவை கட்டுக்கடங்காமல் பெருகக் காரணம் ஆண்டவர் தந்த புதையலாம். விண்ணரசு பற்றிய சத்தியத்தினை அறியாமையே.

**செபம்**

எமக்குக் கடைத்த புதையலாம் கிறிஸ்துநாதரின் உள்ளாந்தரத்தை நற்செய்தி வழியாக அறிந்து, அதன்படி வாழ்ந்து கிடைத்தற்கரிய புதையலாம் விண்ணரசிற்கு உரியவர்களாக மாறிட எம்மை நிறைவாக ஆசீர்வதித்தருளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 2011 ஆடி 28 வியாழன் | | |
| வி. பயணம் | தி.பா. | பு.மத்தேயு |
| 40:16-21,30-38 | 84:1-4,7,10 | 13:47-53 |

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

*விண்ணரசு கடலில் வீசப்பட்டு எல்லா வகையான மீன்களையும் வாரிக் கொண்டு வரும் வலைக்கு ஒப்பாகும். வலை நிறைந்ததும் அதை இழுத்துக் கொண்டு போய்க் கரையில் உட்கார்ந்து நல்லவற்றைக் கூடைகளில் சேர்த்து வைப்பர். கெட்டவற்றை வெளியே எறிவர். இவ்வாறே உலக முடிவிலும் நிகழும். வானதூதர் சென்று நேர்மையாளரிடையேயிருந்து தீயோரைப் பிரிப்பர். பின் அவர்களைத் தீச்சூளையில் தள்ளுவர். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும். இவற்றையெல்லாம் புரிந்து கொண்டீர்களா என்று இயேசு கேட்க அவர்கள் ஆம் என்றார்கள். பின்பு அவர் ஆகையால் விண்ணரசு பற்றிக் கூறிக்கொண்ட எல்லா மறைநூல் அறிஞரும் தம் கருவூலத்திலிருந்து புதியவற்றையும் பழையவற்றையும் வெளிக்கொணரும். வீட்டு உரிமையாளரைப் போல் இருக்கின்றனர் என்று அவர்களிடம் கூறினார்.... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியின் விழிப்புறுதல்**

ஞானத்தையும் அறிவையும் எமக்களிக்கும் தூயவரே! இன்றைய நாளில் இயேசு கூறும் உவமையின் மறைந்திருக்கும் மறைபொருளை விளங்கிக் கொள்ள எம்மையே வழிநடத்தியருளும்.

விண்ணரசின் மகிமையையும் மக்கள் அதனுள் எவ்வாறு பிரவேசிக்கலாம் என்பதனை பல உவமைகள் மூலம் இயேசு விளக்கிக் கூறியுள்ளார். இன்றைய நற்செய்தியில் சாதாரண மக்கள் விளங்கிக்கொள்ள முடியுமானதாக விண்ணரசை கடலில் வீசப்படும் வலைக்கும் சமனாக ஒப்பிடுகின்றார். கடலில் வீசப்படும் வலையில் பல வகையான மீன்கள் பிடிப்பட்டாலும் மீனவன் கரைக்கு வந்த பின்னரே அதனைத் தெரிவு செய்வான். பெறுமதியானதும், நல்லதுமான மீன்களைத் தெரிந்தெடுத்து அதனை வேறுபடுத்துவான். அவசியமற்றவையும் பழுதானவைகளையும் அப்புறப்படுத்துவான். இவ்வாறாகவே இறுதிநாளில் தீர்ப்பும் நடைபெறும். நல்லோர் தீயோரிடமிருந்து வேறுபடுத்தப்படுவார்கள் என்பதை தெளிவாக எடுத்துக் கூறுகின்றார்.

**எம் பேரில்**

இவ்வுலகில் நாம் வாழ்ந்த வாழ்வுக்கான பரிசை பொதுத் தீர்வையின்போது எமக்குத் தர இறைவன் ஆயத்தமாக இருக்கின்றார். இறை விருப்பம் அறிந்து அதன்படி வாழ்ந்து எம் வாழ்வை மாற்றிக்கொண்டு, விண்ணரசின் உரிமையாளராக இன்றும் இறைவன் அழைக்கின்றார். தீய சிந்தனைகளிலிருந்தும், செயல்களிலிருந்தும் விலகி தாழ்ந்த மனநிலையுடன் மனம் திரும்புவோம். நீங்கள் மனம் திரும்பி சிறு பிள்ளைகளைப் போலாகாவிடில் விண்ணரசில் புகமாட்டீர்கள் என்கின்றார் இயேசு.

இறைவனின் ஆழ்ந்த விசுவாசத்துடன் வாழ நாம் முகம் கொடுக்க நேரிடும் தடைகளை இனங்கண்டு துன்ப துயரங்களில் தளராமல் இயேசு என்னை வலுவூட்டுகிறார் என்ற நம்பிக்கையுடன் வாழ்வோம். என் மனநிலை என்ன? உலக ஆசைகளா அல்லது இறை அன்பா! கள்ளங்கபடமற்ற உள்ளத்துடன் இயேசுவின் அன்பில் நிறைவுபெற்று அவர் வார்த்தைகளில் உறுதியான விசுவாசத்துடன் வாழ்ந்து எம் வாழ்வை நிலைவாழ்வாக மாற்றிக்கொள்ள வரம் வேண்டுவோம்.

**செபம்**

அன்பின் தந்தாய்! திருமுழுக்குப் பெற்ற நாம் ஒவ்வொருவரும் நாம்பெற்ற அழைப்பை ஏற்று அதற்கேற்ப வாழ உம் ஆவியின் அருளால் நிரமபபியருளும் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன் நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்**

| | | | |
|---|---|---|---|
| 2011 ஆடி 29 வெள்ளி | | | தூய மார்த்தாள் நினைவு |
| 1யோவான் | தி.பாடல் | பு. யோவான் அல்லது | பு.லூக் |
| 4:7-16 | 34:1-10 | 11:19-27 | 10:38-42 |

**பரி. நற்செய்தியிலிருந்து**

*அவர்கள் தொடர்ந்து சென்று கொண்டிருந்தார்கள். அப்போது இயேசு ஓர் ஊரை அடைந்தார். அங்கே பெண் ஒருவர் அவரைத் தம் வீட்டில் வரவேற்றார். அவர் பெயர் மார்த்தா. அவருக்கு மரியா என்னும் சகோதரி ஒருவர் இருந்தார். மரியா ஆண்டவருடைய காலடி அருகில் அமர்ந்து அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தார். ஆனால் மார்த்தா பற்பல பணிகள் புரிவதில் பரபரப்பாகி இயேசுவிடம் வந்து ஆண்டவரே நான் பணிவிடை செய்ய என் சகோதரி என்னைத் தனியே விட்டுவிட்டாளே. உமக்குக் கவலையில்லையா, எனக்கு உதவிபுரியும்படி அவளிடம் சொல்லும் என்றார். ஆண்டவர் அவரைப் பார்த்து மார்த்தா, மார்த்தா, நீ பலவற்றைப் பற்றி கவலைப்பட்டுக் கலங்குகிறாய். ஆனால் தேவையானது ஒன்றே. மரியாவோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள். அது அவளிடமிருந்து எடுக்கப்படாது என்றார். (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியில் விழிப்புறுதல்**

அன்பின் தூய ஆவியானவரே! என்னில் ஒளியேற்றி வழிநடத்தும்.

இறைவார்த்தையூடாக இரு பெண்களுடைய மனநிலையில் மரியா முற்றும் முழுதாக வெறுமையாகி ஆண்டவருடைய பாதத்தில் தூய மனதோடும், இறைபயத்தோடும் அமர்ந்து அவரின் வார்த்தையை கேட்டுக்கொண்டிருக்கிறாள்.மார்த்தாவோ பரபரப்பாய் பணிகள் புரிவதைப் பார்த்து நீ கலங்காதே என்னிடம் வா தேவையானவற்றை தருவேன் என்று அழைக்கிறார் இயேசு.

**எம் பேரில்**

எமது தேவைகளில் நாங்கள் ஆண்டவர் பாதம் அமர்ந்து அவரோடு உரையாடி நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்து அனுபவித்த நிலைக்கு நன்றி. மார்த்தாவைப் போல் எங்களால் மட்டும் முடியும் என்று பல காரியங்களில் ஈடுபட்டு கலவரப் பட்டு பயனடையாமல் போன நேரங்கள் ஏராளம். அதற்கு விழிப்புற்று கலங்காதே என்ற வார்த்தையினூடாக இறை அழைப்பிற்கு நம்பிக்கையுடன் தாழ்பணிந்து நல்ல பங்கை தேர்ந்தெடுப்போம்.

**செபம்**

*அவர் முகத்தை நாடுவோர்*
*மகிழ்ச்சியால் மிளிர்ந்தனர்.*
*சிங்கக் குட்டிகள் பட்டினி*
*கிடக்கும். ஆண்டவரை*
*தேடுவோர்க்கு*
*குறையில்லையே*
*குறையில்லையே*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய ஆவியானவரே! நான் உம்மை வணங்கி நமஸ்கரிக்கின்றேன்
நான் செய்ய வேண்டியதை எனக்கு ஆணையிட்டருளும்

| 2011 ஆடி 30 சனி<br>லேவி | தி.பா. | பு.மத்தேயு |
|---|---|---|
| 25:1,8-17 | 67:1-2,4,6-7 | 14:1-12 |

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

*அக்காலத்தில் குறுநில மன்னன் ஏரோது, இயேசுவைப் பற்றிய செய்தியைக் கேட்வியுற்றான். அவன் தன் ஊழியரிடம் இவர் திருமுழுக்கு யோவான்தான் இறந்த யோவானைக் கடவுள் உயிர்பெற்றெழச் செய்தார். இதனால் தான் இந்த வல்ல செயல்களை இவர் செய்கிறார் என்று கூறினான். ஏரோது தன் சகோதரனான பிலிப்புவின் மனைவியாகிய ஏரோதியாவின் பொருட்டு யோவானைப் பிடித்துக் கட்டிச் சிறையில் அடைத்திருந்தான். ஏனெனில் யோவான் அவனிடம் நீர் அவளை வைத்திருப்பது முறையல்ல என்று சொல்லிவந்தார்.... (நற்செய்தியை தியானமாக வாசிக்கவும்)*

**ஒளியின் விழிப்புறுதல்**

என் ஆருயிர் தூய ஆவியானவரே, இந்நிகழ்ச்சிப் பகுதிக்குள் இயேசுவின் உள்ளத்தைக் காண வல்லமை தந்தருளும்.

திருமுழுக்கு யோவான் ஏரோது அரசனின் பாவங்களையும் அநீதியையும் கண்டு தட்டிக் கேட்கின்றார். அதனால் ஏரோது நீதிமானாகிய அவரை சிறையில் அடைக்கின்றான். ஏரோதியாளின் மகளின் நடனத்தில் களிப்புற்ற அரசன் அவள் எதைக் கேட்டாலும் தருவேன் என்ற வாக்குறுதியை நிறைவேற்ற யோவானைக் கொலை செய்து பாவத்தின் மேல் பாவம் செய்கிறான் என்பதைக் காண்கின்றார். யோவான் ஒளியாக வாழ்கின்றார். ஏரோது இருளில் வாழ்கின்றான். ஒளிதான் இருளை அகற்றும். இருள் ஒளியை ஒருக்காலும் அகற்ற முடியாது. அழிக்க முடியாது. இந்நற்செய்தியில் இருள் ஒளியை அழித்ததுபோல் தோன்றினாலும் அது தற்காலிகமானதாகும். இது தான் உண்மை. அவரின் உயிரை ஏரோது எடுத்தாலும் உண்மைக்கச் சாட்சியாக, நீதி நேர்மைக்காக இன்றும் வாழ்கின்றார். எனவே இருள் ஒருகாலும் ஒளியை வெற்றி கொள்ள முடியாது. ஒளிதான் இருளை வெற்றிகொள்ளும்.

**எம் பேரில்**

உண்மைக்கும் நீதிக்கும் சான்று பகிர முன்வர என்னால் முடியுமா? நான் தயங்குகிறேன். ஏனெனில் என் சுயநலம். உண்மைக் கிறிஸ்தவனாக வாழ ஆண்டவருக்கும் நேர்மைக்கும் சான்று பகிர ஏன் அஞ்ச வேண்டும். எனக்கு உதவி செய்ய என்னுள் ஒருவர் இருக்கின்றார் என்ற நம்பிக்கை என்னில் இருக்க வேண்டும். ஒளி உம்மை வழிநடத்தும். இடமளிப்போம். ஆண்டவரில் விசுவாசம் கொள்வோம். அவரே எம் வாழ்வும் ஒளியுமாவார்.

**செபம்**

அன்பான ஆண்டவரே! புனித யோவான் உண்மை, நீதி, நேர்மை, விடுதலை, இவற்றிக்காக வாழ்நததுபோல எம்மையும் இவ்வுலகில் நீதி, நேர்மை, விடுதலைக்காக இயேசுவிற்கு சாட்சி பகிரும் மக்களாக வாழ வரம் அருள வேண்டும் என்று மன்றாடுகின்றோம். எந்தச் சந்தர்ப்பத்திலும் நீதி நேர்மையோடு மக்களுக்கு ஒளியாக வாழ எம்மை ஆசீர்வதித்தருளும் ஆமென்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| **2011 ஆடி 31 ஞாயிறு** | | **2011 ஆடி 31 ஞாயிறு** | |
| எசா 55:1-3 | தி.பாடல் 145:8-9,15-18 | உரோ 8:35,37-39 | பு.மத் 14:13-21 |
| அல்லது எசா 6:1-9 | தி.பாடல் 145: 8-9,15-18 | எபேசி 1:3-14 | பு.மத் 9:35-38 |

இன்று தேசிய குருக்கள் தினமாகும். எமது ஆண்டவராம் இயேசுவின் தூதுரைப் பணி வழியாகவும், அவரது வாழ்க்கைப் பலிவழியாகவும் எமக்கு உரிமையாக்கித் தந்த மீட்பினை பயனுள்ள விதமாக அனுபவிப்பதற்கு அழைப்பு விடுகின்ற சபைத் தாயானவள் அதற்காக வேண்டி வழிகாட்டுகின்ற அர்ப்பணமாகின்ற (குருக்கள்) சங்கத்தைப் பற்றியும் இன்றைய நாளில் எமக்கு ஞாபகப் படுத்துகின்றது. விண்ணரசுக்காக வேண்டி எல்லாவிதங்களிலும் இறை மக்களை தயார்படுத்துகின்ற குருமாரை திருப்பொழிவு செய்யுமாறு வேண்டுவோம். அவர்கள் முகங்கொடுக்கின்ற அனைத்துச் சவால்கள் முன்னிலையிலும், இறைமகனது நோக்கிற்கமைய செயற்படுவதற்கான வல்லமையை வேண்டுவோம்.

**முதலாவது வெளிப்பாட்டிலிருந்து**

தாகமாய் இருப்பவர்களே, நீங்கள் அனைவரும் நீர் நிலைகளுக்கு வாருங்கள்... காசு பணமின்றித் திராட்சை இரசமும் பாலும் வாங்குங்கள். உணவாக இல்லாத ஒன்றிற்காக நீங்கள் ஏன் பணத்தைச் செலவிடுகின்றீர்கள்? நிறைவு தராத ஒன்றிற்காய் ஏன் உங்கள் உழைப்பை வீணாக்குகின்றீர்கள்? எனக்குக் கவனமாய் செவிகொடுங்கள். நல்லுணவை உண்ணுங்கள்... எனக்குச் செவி கொடுங்கள். என்னிடம் வாருங்கள். கேளுங்கள். அப்பொழுது நீங்சகள் வாழ்வடைவீர்கள்... தாவீதுக்கு நான் காட்டிய மாறாத பேரன்பை உங்களுக்கும் காட்டுவேன்.

**இறைமகன் பேரில்**

எல்லா அதிகாலைகளிலும் எல்லாக் கணங்களிலும் இறை அன்பின் ஊற்றிலிருந்து பானம் பண்ணிய இறை மகன் இயேசு அதன் உருசியை அனுபவித்தவாறு தமது சீடரையும் மக்களையும் அந்த அனுபவத்திற்கு உட்புகுவதற்காக வேண்டி அழைப்பு விடுக்கின்றார். இறைவாக்கினர் எசாயா வெளிப்பாட்டிலிருந்த அனுபவத்தை தமது வாழ்வு வழியாகவே வெளிப்பாடாக்குவதற்காக வேண்டி செயற்பட்டார். நிறைவு தருகின்ற விண்ணரசின் பெறுமதிபற்றி இயேசு எமக்கு ஞாபகப்படுத்துகின்றார். தந்தைக்கு முழுமையாகச் செவிமடுத்தவாறு விண்ணரசினைப் பற்றிய கனவினை நன்றாக இனங்கண்டு கொண்டு, அதற்காகவே அர்ப்பணமாகிய இறைமகன் முன்னிலையில் தோன்றி நிற்போம். அவருக்கிருந்த தாகத்தின் ஒரு துணியையேனும் அனுபவிக்கச் செய்யுமாறு வேண்டுவோம்.

இறையன்பு எனும் உணவினால் ஊட்டம் பெற்று பூரணமான மகிழ்வினை அனுபவித்தவாறு ஆண்டவரைப் புகழுவதற்கும் திருப்தியற்ற வாழ்விற்கான பதிலாக இறை மகன் பேரில் எப்போதும் கண்களை ஏறெடுப்பதற்குமான தாகத்தை வேண்டுவோம்.

**பரிசுத்த நற்செய்தியிலிருந்து**

....இயேசு அங்கு சென்றபோது பெருந்திரளான மக்களைக் கண்டு அவர்கள் மீது பரிவு கொண்டார். அவர்களிடையே உடல் நலமற்றிருந்தோரைக் குணமாக்கினார். மாலையான போது சீடர் அவரிடம் வந்து.... தேவையான உணவு வாங்கிக் கொள்ள மக்கள் கூட்டத்தை அனுப்பி விடும் என்றனர்... எங்களிடம் இங்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் தவிர வேறு எதுவும் இல்லை. என்றனர். அவர் அவற்றை என்னிடம் இங்கே கொண்டு வாருங்கள் என்றார்... அவர் அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணாந்து பார்த்து, கடவுளைப் போற்றி அப்பங்களைப் பிட்டுச் சீடரிடம் கொடுத்தார்.....

**இறைமகன் பேரில்**

ஆவியானவரிடமிருந்து கிடைக்கப் பெறுகின்ற பரிசாகிய விழிப்புறுதலை உரிமையாக்கிக் கொண்ட இறைமகன் இயேசு, தந்தையுடன் எப்போதும் தொடர்பு-டையவராக இருந்தார் என்பது உறுதி. தந்தையிடமிருந்து கிடைக்கப்பெற்ற பரிசை தயக்கமின்றி மக்களுடன் பகிர்ந்து கொண்டார். விண்ணிலிருந்து வந்த உண்மையான உணவு அவரேயாவார். தம்மையே உயர்த்தி, நன்றி கூறி,பிட்டு பகிர்ந்தளிப்பதற்காகவே விடுத்த தமது அழைப்பை தெளிவு படுத்திக் கொண்-டிருந்த எம் ஆண்டவர் இயேசு சங்கத்-திற்கிருந்த உண்மையான பசியை இனங்கண்டார். அவரே அவர்களுக்கு உணவாகியவாறு அவர்களுக்காக, அவர்களுக்குள் இல்லாமலாகின்றார்.

உணவாகின்ற அவரது அன்பானது அன்றும் இன்றும் என்றும் எம்மை ஊட்டம்பெறச் செய்தவாறு விண்ணரசை நோக்கி எம்மைக் கடந்து செல்லச் செய்கிறது. தந்தையைப் பற்றி மக்களுக்கிருக்கின்ற உருவச் சாயலை மேலும் கருத்துள்ளதாகச் செய்பவரும் அவரேயாவார்.

சீடத்துவ சங்கத்திடமிருக்கின்ற சொற்பத்தை ஆசீர்வதிக்கின்றார். அரசிற்காக வேண் டி கொடுப்பதற்காக வேண்டி எம்மிடமிருக்கின்ற சொற்பத்தை அவரிடம் உயர்த்தும் போது அவர் அதை ஆசீர்வதித்து எம்மைத் திருப்தியடையும் படி செய்கின்றார். உண்மையானவே எமக்குள் மறுவு-ருவாகி இருக்கின்ற ஆண்டவர் எமக்-குள்ளேயே கரைந்து இல்லாமலாவது போல, மக்களிடையே உடைந்து, நொறுங்கி இல்லாமலாகி தந்தையை மாட்சிப்படுத்துவதற்கான வல்லமையை வேண்டுவோம்.

**இரண்டாவது வெளிப்பாட்டிலிருந்து.**

கிறிஸ்துவின் அன்பிலிருந்து நம்மைப் பரிக்கக் கூடியது எது? வேதனையா? நெருக்கடியா? இன்னலா? பட்டினியா? ஆடையின்மையா? இடரா? சாவா? எது தான் நம்மைப் பிரிக்க முடியும்? ஆயினும் நம்மேல் அன்பு கூர்ந்தவரில் செயலால் மேற்கூறியவை அனைத்திலும் நாம் வெற்றி மேல் வெற்றி அடைகிறோம்.... நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாய் அருளப்பட்ட கடவுளின் அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கவே முடியாது என்பது என் உறுதியான நம்பிக்கை....

**இறைமகன் பேரில்**

இறைமகன் இயேசுவின் வாழ்க்கைப் பலி காரணமாக அவரது அன்பு வெளிப்பாடாகியதோடு இறையன்பிலிருந்து மனிதனைப் பிரிக்கக் கூடிய அனைத்தும் இறையன்பினை அனுபவிப்பதற்கான ஊடகங்களாக மாறியுள்ளன. அதனை உரிமையாக்கிக் கொள்வோம்...

**செபம்**

ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர். எளிதில் சினம் கொள்ளா-தவர். பேரன்பு கொண்டவர். ஆண்டவர் எல்லாருக்கும் நன்மை செய்பவர். தாம் உண்டாக்கிய அனைத்தின் மீதும் இரக்கம் காட்டுபவர்... தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும் உண்மை-யாய்த் தம்மை நோக்கி மன்றாடும் யாவருக்கும் ஆண்டவர் அண்மையில் இருக்கின்றார்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "தூய ஆவியில் பயணம்" சஞ்சிகையை தபால் மூலம் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவம்

பெயர் : ..........................................................................................................

சஞ்சிகையை அனுப்ப வேண்டிய விலாசம் : ..................................................................

..........................................................................................................................

.................ஆம் ஆண்டு....................... மாதம் தொடக்கம் ஆறு/பன்னிரெண்டு மாதங்களுக்காக ரூபா.................................ஐ.......... இலக்கமுடைய காசுக்கட்டளையை /காசோலையை இத்துடன் அனுப்பியுள்ளேன்.

திகதி :.................................                                    ..........................................

கையொப்பம்

---

## "தூய ஆவியில் பயணம்" சஞ்சிகை

- ❖ தபால் கட்டணத்துடன் : ஆறு மாதங்கள் - ரூ. 110.00
  பன்னிரெண்டு மாதங்கள் - ரூ. 220.00
- ❖ காசுக்கட்டளைகள்/காசோலைகள் : "கிது தன புபுதுவ" என்ற பெயருக்கு மாத்திரம் அனுப்பவும்.
- ❖ பணம் செலுத்தும் அலுவலகம் : வல்பொல (மே. மா.)
- ❖ புபுதுவ நடுநிலையம் : ஸ்ரீ பிரசங்சாராமய, வல்பொல, ராகம.
  தொலைபேசி : 011-2230300 ப.்.க்ஸ் : 011-2231490
  மின்தபால் (E-mail) : pubuduwa@wow.lk
  Website : www.kithudanapubuduwa.net
  அச்சகம் : புபுது அச்சகம்,
  452, தேசிய பெசிலிக்கா மாவத்தை, தேவத்தை, ராகம.
  தொலைபேசி : 011-2958439
- ❖ பகிர்ந்தளித்தல் : "புபுதுவ" வெளியீடு - பரப்புதல் சேவை
  ஸ்ரீ பிரசங்காராமய, வல்பொல, ராகம.
  தொலைபேசி : 011-2230300
- ❖ சஞ்சிகையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய இடங்கள் :
  - ஸ்ரீ ரம்யா ராமய, பாலக்குடா, தலவில கோயில்.
  - ஸ்ரீ கிறிஸ்து தர்மாராமய, தெதுரு ஓயா, மானுவன்கம, சிலாபம்.
  - புபுது நிவச, தம்பறாவில, வைக்கால்.
  - புபுது நிவச, தங்கொட்டுவ.
  - புபுது நிவச, 386, பிரதான வீதி, நீர்கொழும்பு.
  - கிறிஸ்து கேந்திரய, ஜா-எல.
  - 7வது மாடி, 6வது சின்னப்பர் நடுநிலையம், கொழும்பு-11.

விலை ரூ. 12/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப்படக்கதை

**“அவர்கள் போகும் பொழுது,ஓர் ஊருக்குள் வர,
மார்த்தாள் எனும் பெண் ஒருத்தி
தன் வீட்டில் அவரை வரவேற்றாள்.
அவளுக்கு மரியாள் என்னும் சகோதரி இருந்தாள்.
அவள் ஆண்டவரின் காலடியில் அமர்ந்து,
அவருடைய வார்த்தையைக் கேட்டுக்
கொண்டிருந்தாள்.”**

(பு. லூக்காஸ் 10: 38-39)

இயேசு ஆண்டவருடன் நெருங்கி, அவருடைய காலடியில் இருந்து
அவரது வார்த்தைக்கு செவிமடுக்க முடியாத அளவிற்கு, அதிகமாக வேலையில் ஈடுபட்டிருக்கும் இடத்தில் இருந்து
இருக்க வேண்டிய இடத்திற்கு நான் கடந்து செல்ல வேண்டும்.

**“ஆனால் தேவையானது ஒன்றே.
மரியாள் நல்ல பங்கைத் தெரிந்து
கொண்டாள்.
அது அவளிடம் இருந்து எடுக்கப்படாது.”**

(பு. லூக். 10:42)

தேவையற்றவை, தேவையானவை, அதிகம் தேவைப்படுவது எது என்பதைப் தெரிந்து கொண்டு செயற்படுவதற்கு தூய ஆவியானவரே! எனக்கு வழிகாட்டியருளும்.

2011 ஆடி மாதம் தூய ஆவியில் பயணம்

ISSN 1391 - 5975

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org